# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 13 புதன்கிழமை (29.11.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 03


# யுத்தநிறுத்த உடன்படிக்கை செயலிழந்து செத்துவிட்டதா?

## பிரபாவின் அறிவிப்பால் கொழும்பு தடுமாற்றம் நிலைமையைத் தெளிவுபடுத்த பகீரத முயற்சி

கொழும்பு, நவம்பர் 29

இலங்கையில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் செத்துச் செயலிழந்து, உக்கிப்போய் வெறும் தாளாகிக் கிடக்கின்றது என்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தமது மாவீரர் தின உரையில் பகிரங்கமாக அறிவித்திருப்பதில் அந்த உடன்படிக்கை முற்றாக கைவிடப்பட்டுவிட்டது என்று புலிகளின் தலைவர் அர்த்தப்படுத்துகின்றாரா? இதனை உறுதிப்படுத்த முடியாமல் திண்டாடுகின்றது கொழும்பு அரசு.

தலைவர் பிரபாகரனின் அறிவிப்பின் அடிப்படையில், புலிகளின் இயக்கம் யுத்த நிறுத்த உடன்பாட்டிலிருந்து விலகிவிட்டது என்று கொள்ளலாமா என்பதைப் புலிகளிடமே நேரடியாகக் கேட்டறிந்து தெரிவிக்கும்படி இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் முயற்சியில் அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வேயையும், இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவையும் இலங்கை அரசு அவசரமாகக் கோரியிருக்கின்றது.

போர்நிறுத்த ஒப்பந்தம் குறித்து தமது மாவீரர் தின உரையில் தலைவர் பிரபாகரன் குறிப்பிட்ட விடயங்கள், கொழும்பில் ஒவ்வொரு வார்த்தையாக, வார்த்தையாகப் பிரித்து, வேறுபடுத்தி அதனடிப்படையில் ஆராயப்படுகின்றன.

"...(மஹிந்த அரசின்) இந்த போர் முனைச் செயற்பாட்டால் போர்நிறுத்த ஒப்பந்தம் செத்துச்செயலிழந்து போய்க் கிடக்கின்றது. ஒப்பந்தம் கிழிக்கப்படாமலேயே உக்கிப்போன தாளாகி உருக்குலைந்து

(08 ஆம் பக்கம் பார்க்க)

## மூடிய அறையில் ரவிராஜ் படுகொலை விசாரணை

கொழும்பு, நவ.29

கட்டுப் படுகொலை செய்யப்பட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் மரணம் தொடர்பான விசாரணைகளை மூடிய அறைக்குள் நடத்துவதற்கு கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம் தீர்மானித்தது.

குற்றப் புலனாய்வுப் பொலிஸார் விடுத்த வேண்டுகோளை ஏற்று இந்த முடிவுக்கு நீதிமன்றம் வந்தது.

இந்த விசாரணைகளுக்குப் பத்திரிகையாளர்களையும் அனுமதிக்கக் கூடாது எனக் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் கோரியமையை அடுத்து, விசாரணை பற்றிய செய்தியைச் சேகரிக்கப் பத்திரிகையாளர்களுக்கும் தடை விதிக்கப்பட்டது.

நேற்றுக் கொழும்பு மேலதிக நீதிவான் எம்.வை.மொஹமட் இஸ்ஸடீன் முன்னிலையில் - பகிரங்க நீதிமன்றத்துக்குப் பதிலாக - நீதிவானின் அறையில் இந்த மரண விசா

(08 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவை நேரடியாக சந்தித்துப் பேச இப்போதும் தயார் என்கிறார் மஹிந்த!



### மாவீரர் தின உரை குறித்து தாம் அக்கறைப்படவே மாட்டாராம்

புதுடில்லி, நவ.29

இலங்கைப் பிரச்சினைக்கு பேச்சு மூலமாகவே தீர்வு காணப்பட வேண்டும் என்றே தாம் நம்புகிறார் எனவும் அதற்காக விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை நேரடியாகச் சந்தித்துப் பேசுவதற்கு இப்போதும் தாம் தயாராகவே இருக்கிறார் என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவின் சில தனியார் (08 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் விசேட தூதுவர் போவர் அவசரமாக நாளை கொழும்பு விரைவு



கொழும்பு,நவ.29

நோர்வேயின் விசேட தூதுவர் ஹன்சன் போவர் அவசர அவசரமாக நாளை கொழும்புக்கு வருகிறார்.

அவர் கொழும்புக்கு விரையும் தகவலை நோர்வேயின் தூதரகப் பேச்சாளர் எரிக் நியும் பேக் ஊர்ஜிதம் செய்தார்.

நேற்றுமுன்தினம் மாவீரர் தின உரையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் வெளியிட்டுள்ள கருத்துக்களினால் உருவாகியுள்ள புதிய சூழ்நிலையை அடுத்து - (08 ஆம் பக்கம் பார்க்க)

## மன்மோகன் சிங்குடன் இன்று சந்திப்பு

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று புதுடில்லியில் வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

நேற்றுக்காலை அமைச்சர் பிரணாப் முகர்ஜியை மஹிந்த ராஜபக்ஷ சந்தித்தார். விடுதலைப் புலிகளின் தலைவரின் மாவீரர் தின உரையில் அவர் தெரிவித்திருக்கும் கருத்து உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து இருவரும் விவாதித்திருக்கின்றனர் என்று புதுடில்லித் தகவல்கள் தெரிவித்தன.

நேற்று மாலையில் காங்கிரஸ் தலைவி

(08 ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்து கடைப்பிடிக்கத் தயார்

### கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் தெரிவிப்பு

கிளிநொச்சி,நவ.29

போர்நிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்து கடைப்பிடிக்க விடுதலைப் புலிகள் தயார் என்று கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று கிளிநொச்சிக்கு வந்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் இவ்விடயம் எடுத்துரைக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரையின் எதிரொலியாக - யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவொன்று அவசர விஜயம் மேற்கொண்டு நேற்று கிளிநொச்சிக்கு வந்தது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் துணைத் தலைவரும் தலைமை அதிகாரியுமான ஜோன் ஒஸாலிஸ் சொய்ம் தலைமையிலான குழுவினரே நேற்று கிளிநொச்சிக்கு வருகை தந்தனர். அக்குழுவில் ஐஸ்லாந்து வெளிவிவகார அமைச்சின் அதி

(08 ஆம் பக்கம் பார்க்க)




## ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழருக்கு உரிய அதிகாரம் வழங்கப்பட வேண்டும்

### இதுவே இந்தியாவின் நிலைப்பாடு என மஹிந்தவுக்கு தெரிவிப்பு

புதுடில்லி,நவ.29

ஒன்றுபட்ட இலங்கைக்குள் அனைத்துத் தரப்பினரும் ஏற்கக்கூடிய தீர்வு காணப்பட வேண்டும் தமிழர்களுக்கு உரிய அதிகாரங்களையும் உரிமைகளையும் வழங்க வேண்டும் இதுவே இந்தியாவின் நிலைப்பாடாகும்.

இப்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

ஐந்து நாள் விஜயம் மேற்கொண்டு இந்தியா வந்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியை நேற்றுக்காலை சந்தித்துப் பேசினார்.

இந்திய கடற்படை - இலங்கைக் கடற்படை ஆகியன கூட்டு ரோந்து நடத்த வேண்டும் என்றும் -

அதன்மூலம் விடுதலைப் புலிகளின் கடத்தல்களைத் தடுக்கமுடியும் என்றும் - ராஜபக்ஷ கோரிக்கை விடுத்தார்.

மாவீரர் தின உரையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் வெளியிட்ட கருத்துகள் தொடர்பாகவும் இருவரும் கலந்துரையாடினர்.

இலங்கையில் மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்றும் - அப்பாவி மக்கள் கொல்லப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர்கள் குறித்து இராணுவம் பெற்றோர், ஆசிரியருக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.29

பாதுகாப்புப் படையினருக்கு எதிரான தாக்குதல்களில் மாணவர்கள் ஈடுபடுவதையும் ஒத்துழைப்பு வழங்குவதையும் தடுத்து நிறுத்துவது பெற்றோர், ஆசிரியர்களின் கடமை - என்று 51ஆவது படையணி சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக நேற்று விடுக்கப்பட்ட பத்திரிகை அறிக்கையில் இவ்விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பாதுகாப்புப் படையினருக்கு எதிராக நடைபெற்ற அனைத்துத் தாக்குதல்களும் பாடசாலை மாணவர்கள் மிக அதிகளவாக இருக்கும் இடங்களில் தான் நடைபெற்றன. இதற்கு பாடசாலை மாணவர்களைப் பயன்படுத்தியதும், இப்போதும் மேல் வகுப்பு மாண

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சிவப்பிரகாசபிள்ளை



வட்டு. கிழக்கு, 'சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் "வாய்மையகம்" உடுவில் கிழக்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் 02, Waidya Place, Off Waidya Road, Dehiwala இல் வசித்தவருமாகிய "குண்டுமணி மாஸ்ரர்" சிவப்பிரகாசபிள்ளை (முன்னாள் வைத்தீஸ்வராக் கல்லூரி ஆசிரியர், ஓய்வுபெற்ற விளையாட்டு உத்தியோகத்தர்) 26.11.2006 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் அங்கயற்கண்மணி அம்பாளின் (இளைப்பாறிய உப-அதிபர் இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்) பாசமிகு கணவரும் இரட்ணசிங்கத்தின் (மலேசியா) அன்புத் தம்பியும் சிவசக்தி, சிவநாதன், சிவநேசன், சிவசங்கர், சிவகரன், சிவகலை, சிவகங்கா ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவநேசன், மைதிலி, உஷா, சொர்ணராணி, சிவஅனுஜா, பிரேம்நாத், சகாதேவன் ஆகியோரின் அன்பு மாமனும் சிவயோகன், சிவகுமரன், சிவகௌரி, சிவசங்கரி, லக்சன், சிவசுருதி, சிவப்பிரியை, சிவநங்கை, சிவகாமி, பைரவி, சிவமூரி, நேத்திரி, கஸ்தூரி, கார்த்திகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.11.2006) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் 02, Waidya Place, Dehiwala இல்லத்தில் நடைபெற்று கல்கிசை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P: 0112721605, 0777879349.

தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள். (சி-50498)

## வைத்தியலிங்கம் நவரத்தினம்

(முன்னாள் கிளை முகாமையாளர் - அளவெட்டி - மல்லாகம் ப.நோ. கூ. சங்கம்)



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியலிங்கம் நவரத்தினம் நேற்று (28.11.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியலிங்கம் - நாகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் கெங்காதரன் (உடற்கல்வி, டிப்ளோமா), சிவப்பிரியா (அமரர்), நவதகன், ஜெனனி (2007 A/L கலை - அருணோதயக் கல்லூரி), நவநாதன் (அருணோதயக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கணேசம்மா (மானிப்பாய்), தங்கரட்ணம் (ஏழாலை), விநாயகராசா (கொழும்பு), இரத்தினேஸ்வரி (கனடா) ஆகியோரின் சகோதரனும் கனகயோகத்தின் (அச்சுவேலி) மைத்துனரும் தேவாவின் அன்பு மாமனும் பவதரனின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2006) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கேணிப்பிட்டி இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருக்கடி, அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

தகவல்: குடும்பத்தினர். (55725)

## திருமதி துரைசிங்கம் செல்லம்மா



திருநெல்வேலி,தலங்காவற்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் செல்லம்மா நேற்று (28.11.2006) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இளையதம்பி- பார்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற துரைசிங்கத்தின் மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, பொன்னம்மா, கனகம்மா, கந்தசாமி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2006) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்பாட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தலங்காவற்பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தொ.பே. இல. 222 5009. (55728)

தகவல்: பேரா மகன், மகாலிங்கம் (மகன்).

## திருமதி ஜெயபாக்கியம் ஜோன்ராஜா



சங்குவேலி, உடுவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயபாக்கியம் ஜோன்ராஜா 27.11.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளப்பு ஜோன் ராஜாவின் (கொழும்பு வர்த்தகர்), அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மருதப்பு - தம்பு தம்பதியரின் அன்பு மகளும் திருமதி ஜெயசிந் ஜீவமலர் (அவுஸ்திரேலியா), திருமதி ஜெயசிந் சுமதி (கனடா), செல்வி ஜெயசிந் மேரி (World Vision Lanka) ஆகியோரின் பாசமிகு தாயும் டானியல் ஜெபரட்ணம் பிலிப்ஸ் (அவுஸ்திரேலியா), குசைப்பிள்ளை பெனட்ராஜ் (கனடா) ஆகியோரின் மாமியும் கரோலின் குமித்தா, இவோண் பிரிசிலா, யோசப் டிலோஜன், மேரி டயானா, மேரி டினேசினி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் மகிந்த மலர்ச்சாலையில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் நல்லடக்கம் (30.11.2006) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்கிசை சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொழும்பு - 6. (55729)

தகவல்: மக்கள், மருமக்கள்.

# குழந்தைகளுக்கான பால்மா விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வதியும் சிறு குழந்தைகளுக்கான பால்மா விநியோகம் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளதாக மாநகர ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பால்மா பக்கெற்றுகள் - நகரசபை எல்லைக்குள் உள்ள ஒன்பது சுகாதார வைத்திய நிலையங்களில் வைத்து இலவசமாக விநியோகிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (202-88)

# பதிவு செய்த நோயாளர்களுக்கு மருந்து விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையில் கடந்த 17ஆம் திகதியும் அதற்கு முன்னரும் பதிவு செய்தவர்களுக்கான மருந்து விநியோகம் நேற்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் பணிமனையில் நடைபெற்று வருகின்றது.

அலுவலக நேரத்தில் வந்து மருந்துகளைப் பெற்றுக் கொள்ளுமாறு பதிவு செய்த நோயாளர்களை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (202)

### தவறிவிட்டது

சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய் என்னும் முகவரியைச் சேர்ந்த தெய்வேந்திரம் விமலநாதன் என்பவரது தேசிய அ. அட்டை (672421107V), வீசே. அ. அட்டை என்பன 24.11.2006 அன்று சித்தன்கேணி கண்ணன் ஆலயத்திற்கு அருகில் தவறிவிட்டன.

கண்டெடுத்தவர்கள் உதவும் உள்ளத்தோர், சண்டிலிப்பாய் வடக்கு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இரத்தினசபாபதி பரிபூரணம்

நவாலி வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திருமதி இரத்தினசபாபதி பரிபூரணம் நேற்று (28.11.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதியின் அன்பு மனைவியும் ரவிச்சந்திரகுமார் (கொழும்பு), காலஞ்சென்ற ஸ்ரீகந்தகுமார், ஸ்ரீ ரஞ்சனி (நூலகர் - பிரதேசசபை மானிப்பாய்), செல்வலக்ஷ்மி, தாமோதரக்குமார், திருக்குமரன், லோகேஸ்வரி, காலஞ்சென்ற புஸ்பகாந்தன் ஆகியோரின் அன்புத் தாயும் இந்திராணி (மட்டக்களப்பு), விலாசினி (ஆசிரியை - வவுனியா), காலஞ்சென்ற வசந்தகுமார், திருச்செல்வம் (செல்வம் வீடியோ - ஆனைக்கோட்டை), பத்மாவதி (ஆசிரியை - கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜெயஸ்ரீ, முருகவேள் ஆகியோரின் அன்பு மாமியும் துஸ்யந்தன், சுவர்ணா, சுகுணா, சுகன்யா, திலீபன், மாறன், வைடூரி, ஸ்ரீகுமரன், வித்தியா, சத்தியா, குணசீதன், பிரிந்தன், ஜீவசாந், குகசாந், சங்கரி, கஜீ ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2006) புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரின் இல்லத்தில்நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரையம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

தகவல்: தாமோதரகுமார் (ராசா- மகன்)

## சுப்பையா தம்பித்துரை

(நேர்தேன் மோட்டோ வேக்ஸ் உரிமையாளர்)

கோண்டாவில் கிழக்கு எம். எஸ். லேனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா தம்பித்துரை நேற்று (28.11.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்றவர்களானசுப்பையா - செல்லாச்சி தம்பதியரின் மகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கமலநாதன், சற்குணநாதன் மற்றும் குகனேஸ்வரி, வைகுந்தநாதன், கோகிலநாதன், தயாளினி ஆகியோரின் அன்புத் தந்தையும் மங்கயர்க்கரசி, புவனேஸ்வரி, வேல்விழி, ராதா, சதாசிவம் ஆகியோரின் மாமனுமாவார்.

இறுதிக்கிரியைகள் பற்றி விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க. வைகுந்தநாதன் (மகன்).

## யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

தரம் 6ஆம் வகுப்பு அனுமதிக்கான விண்ணப்பம் கோரல் - 2007

தரம் - 6ஆம் வகுப்பு அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்கள் பாடசாலை நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி : 20-12-2006

(சி-50497) - அதிபர்.

# கண்ணீர் அஞ்சலி



எமது சங்க பதில் பொதுமுகாமையாளர்

க. வேல்முருகுவின் சகோதரன்

க. கணபதிப்பிள்ளை அவர்கள்

தலைநகர் கொழும்பில் மரணமாகிய செய்தி கேட்டு பணியாளர்களாகிய நாம் பெரும் துயர் கொள்வதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(சி-50495) கூட்டுறவுப் பணியாளர்கள், புலோலி ப.நோ. கூ. சங்கம்.

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா கந்தவனம்

(ஓய்வுபெற்ற அதிபர்)

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், கரணவாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கந்தவனம் 27.11.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் (ஓய்வுபெற்ற அதிபர்) அன்புக் கணவரும் மோகனதாஸன் (சுவிஸ்), மாலினி (முகாமைத்துவ உதவியாளர் - மாகாணக் கல்வி அமைச்சு - திருகோணமலை), பாமினி (ஆசிரியை - யா/ கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மசிறி (சுவிஸ்), அசோக்குமார் (திருகோணமலை), குமரேசன் (கிராம உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மாமனும், விதுஷா (சுவிஸ்), குகரேகா, தனராஜ் (திருகோணமலை - உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி மாணவர்கள்), அனுசன், கஜாநிஜன் (யா/ கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலய மாணவர்கள்) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற செல்லையா (ஓய்வுபெற்ற அதிபர்), மகேஸ்வரி (திருகோணமலை) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.11.2006) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு,அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருகோணமலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

192/7 லேபர் வீதி, உவர்மலை, திருகோணமலை.

T.P: 021 226 4059 - 026 222 4132.

தகவல்: ப. குமரேசன் (மருமகன் கிராம உத்தியோகத்தர்.

## வேலுப்பிள்ளை கந்தசாமி

(ஓய்வுபெற்ற உதவிப் பொது முகாமையாளர் - மின்சாரசபை)

சாவகச்சேரி, கல்வயலைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தசாமி (ஓய்வுபெற்ற உதவிப் பொது முகாமையாளர் - மின்சாரசபை) 27.11.2006 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - மாணிக்கம் தம்பதியரின் கனிஷ்ட புதல்வரும், குணபாக்கியவதியின் அன்புக்கணவரும் சசிகரனின் (வைத்திய கலாநிதி) பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற நடராஜா (முன்னாள் கூட்டுறவு உதவி ஆணையாளர்), காலஞ்சென்ற பொன்னையா, யோகநாதன் (வைத்திய கலாநிதி) ஆகியோரின் சகோதரரும் கமலாதேவி, சேதுப்பிள்ளை, திலகவதி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2006) புதன்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்வயல், சாவகச்சேரி.

தகவல்: ந. கேதீஸ்வரன் (பேரமகன்).

## செல்வி சுதர்சினி நாகலிங்கம் (சுபா)



புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது 27/6, வைமன் வீதி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்ட நாகலிங்கம் - தங்கநேசன் தம்பதியரின் கனிஷ்ட புத்திரி செல்வி சுதர்சினி ஜேர்மனியில் இயற்கை எய்தினார்.

அன்னார் தயானந்தன் (தயா - கனடா), கனகேஸ்வரி (வவா - ஜேர்மனி), சிவபாலன் (ராயு - லண்டன்), திலகேஸ்வரி (பபி - ஜேர்மனி), நகுலேஸ்வரி (வாணி - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மங்கயர்க்கரசி (மங்கை- கனடா), மகேஸ்வரன் (ஜேர்மனி), இராஜேஸ்வரி (கலா - லண்டன்), தர்மராஜா (தர்மன் - ஜேர்மனி), சிறிதரன் (சிறி - பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் அருண், அருணா (கனடா), சிந்துஜன், தர்ஜன், கௌசிகன் (லண்டன்) ஆகியோரின் மாமியும் லசிகரன், லாவண்யா, லக்சிகா, லக்சன், தர்சிகா, தவீனா, தினுஜன், தனுசிகா ஆகியோரின் பாசமிகு சிறியதாயும் வசந்தி, புஸ்பா, சுகந்தா ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற சியாமளாதேவி மற்றும் இரட்ணவேல் (கனடா) ஆகியோரின் பெறாமகளும் காலஞ்சென்ற இரட்ணகுமாரின் மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

27/6, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்: திரு. திருமதி நாகலிங்கம் - தங்கநேசம் (பெற்றோர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கு விளைவிக்கப்படும் மனிதப் பேரவலங்கள்; சர்வதேசத்துக்கு பதில் சொல்லியே ஆகவேண்டும் அரசு

**நாட்டின் முக்கிய அரசியல் சம்பவங்கள் தொடர்பாகவோ அல்லது பாரதூரமான சம்பவங்கள் தொடர்பாகவோ அரசினதோ அல்லது அரசின் ஊடகப்பேச்சாளரதோ கருத்து அரசுக்குச் சார்பான வகையில் அமைவதே வழக்கம்.**

**அரசின் பாதுகாப்புத் தொடர்பான ஊடகப்பேச்சாளரான அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல அண்மைக் காலமாக ஊடக மாநாடுகளில் வெளியிட்டு வரும் கருத்துகள்-குறிப்பாக மூடப்பட்டிருக்கும் ஏ-9 வீதி திறக்கப்படுவது தொடர்பான கருத்துகள் - முன்னுக்குப் பின் முரணானவைகளாக அமைவது எல்லோருக்கும் தெரிந்ததே.**

**அதனைச் சுட்டிக்காட்டும் ஆசிரிய தலையங்கம் இம்மாதம் 26ஆம் திகதி வெளியான 'இருதின' பத்திரிகையில் வெளியானது. அதன் தமிழ்வடிவம் இங்கு தரப்படுகிறது.**

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டு வரும் சம்பவங்கள் மற்றும் வடபுலத்தில் மனிதாபிமானம் காற்றில் பறக்கவிடப்பட்டு வரும் சம்பவங்கள், உள்நாட்டிலும் சர்வதேசத்தின் மத்தியிலும் இந்த அரசைக் கண்டனங்களுக்கும் - சிக்கல்களுக்குள்ளும் தலைகுனிவுக்கும் ஆளாக்கி வருகின்றன. இந்த நிலையில் இலங்கைக்கு உதவும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டின் இணைத்தலைமை நாடுகள் அண்மையில் வாஷிங்ரனில் சந்தித்துக் கொண்டன. இணைத்தலைமை நாடுகள் என்ற வகையில் நோர்வே, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் அக்கூட்டத்தில் பங்குபற்றினர். அக்கூட்டத்தின் முடிவில் இணைத்தலைமைகளால் வெளியிடப் பெற்ற கூட்டறிக்கையில் தொடர்ச்சியாக இலங்கையில் போர்நிறுத்த உடன்பாடு மீறப்பட்டுவருவது தொடர்பாக அரசு மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பு ஆகிய இருதரப்புக்களுமே அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டுமெனத் தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

### மனித உரிமைகள் பேணிப் பாதுகாக்கப்படுவது அவசியம்

அதுதவிர மேலும் சில முக்கியத்துவம் பெறும் விடயங்கள் குறித்தும் அந்த அறிக்கையில் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். அந்த வகையில் மனிதாபிமானத்தைப் பேணும் வகையில் சர்வதேச நடைமுறைகளுக்கு அமைந்த சட்டவிதிகளுக்கு மதிப்பளித்து அவற்றைக் கௌரவிக்கும் விதமாக யுத்தம் காரணமாகத் தமது இருப்பிடங்களை இழந்து இடம்பெயர்ந்து தவிக்கும் நாட்டின் குடிமக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் அவர்கள் யுத்தத்தின் பிடியினின்றும் தப்பி தஞ்சம் பெறுவதற்கு யுத்த சூனியப் பிரதேசமொன்று ஒதுக்கப்படவேண்டுமென்பதும் மனிதாபிமான அடிப்படையில் குடிமக்களுக்கு நிவாரண உதவி ஒத்தாசைகள் வழங்கப்படும் மார்க்கங்கள் தொடர்பான அரசியல் தலையீடுகள் முற்றாக நீக்கப்பட்டு அத்தகைய கடல் வழி, தரைவழி பிரயாண மார்க்கங்கள் நிபந்தனைகள் எதுவுமின்றி நிரந்தரமாக திறந்துவிடப்படுவதும் மற்றும் மனித உரிமைகள் பேணிப் பாதுகாக்கப் படுவதும் அவசியமாகுமென அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## முன்னுக்குப் பின் முரணாகப் பேசும் முக்கிய அமைச்சர் ரம்புக்வெல

### ஒன்றுக்கொன்று பொருந்தாத முரணான அரச பதில்கள்

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக வாஷிங்ரனில் கூடிய இணைத்தலைமை நாடுகள், அக்கூட்டத்தின் இறுதியில் முழு உலகிற்கும் புலப்படும் விதமாகக் காட்டியுள்ள இந்த சிவப்பு விளக்கு சமிக்ஞை எந்தளவு தூரத்துக்கு அபாயகரமானது - தாக்கம்மிகுந்த பக்கவிளைவுகளை ஏற்படுத்தவல்லது என்பதை அரசு சரிவரப் புரிந்துகொண்டுள்ளதா என்பது சந்தேகத்திற்குரியதே. அந்த சமிக்ஞையை அரசு சரிவரப் புரிந்துகொண்டிருக்குமாயின் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பாக அரசு சரியான பதில்களை முன்வைத்திருக்குமேயன்றி எந்தவிதத்திலும் பொருந்தாத பதில்களைத் தெரிவிக்க முனையமாட்டாது. அரசு கையாண்டு வரும் அத்தகைய இறுக்கமான நிலைப்பாடு காரணமாகவே செவிடர்கள் போன்று ஒன்றுக்கொன்று பொருந்தாதவிதத்தில் அரசு பதிலளித்து வருவதாக நாம் விமர்சிக்கவேண்டியுள்ளது. அதற்கு நல்லதொரு உதாரணமாக நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாக மிக அண்மையில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின்போது அமைச்சரும் பாதுகாப்புத்துறை ஊடகப்பேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல வெளிப்படுத்திய பொய்யான கருத்து வெளிப்பாட்டைக் குறிப்பிடவேண்டியுள்ளது.

அதற்கமைய, விடுதலைப் புலிகள் அமைப்பினால் மேற்கொள்ளப்படும் வன்முறைகளுக்கு எதிரான அரசின் ராணுவ நடவடிக்கைகள் குறித்து இணைத்தலைமைகள் எவ்வித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை எனவும் இறைமையுள்ள அரசொன்றினால் அதன் இறைமை பாதுகாக்கப்படும் வகையில் மேற்கொள்ளப்படும் அவ்வாறான செயற்பாடுகள் நியாயமானவைகளே என்பதை இணைத்தலைமைகள் ஏற்றுக் கொண்டுள்ளன எனவும் அவற்றைவிட தீவிரவாத அமைப்பொன்றான விடுதலைப் புலிகள் அமைப்புடன் சமமாகக் கருதப்படும் விதமாக அரசை அதேமட்டத்தில் வைத்துக் கருதஇயலாதெனவும் இணைத்தலைமைகள் கருத்து வெளியிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

### இணைத்தலைமை நாடுகளின் அறிக்கையில் இல்லாத புனையப்பட்ட பொய்க் கதைகள்

அவரது இந்தக் கருத்து வெளிப்பாடு மக்களை ஏமாற்றித் திசைதிருப்பும் நோக்கில் வேண்டுமென்றே புனையப்பெற்ற பொய்க்கதை என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டியுள்ளது. ஏனெனில், அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவால் வெளிப்படுத்தப்பட்ட எந்தவொரு கருத்து வெளிப்பாடும் இணைத்தலைமை நாடுகளால் வெளிப்படுத்தப்பட்ட கூட்டறிக்கையில் உள்ளடக்கப்பெற்றிருக்கவில்லை என்பதே நாம் அவ்வாறு சுட்டிக்காட்டுவதற்குக் காரணமாகிறது. இதற்கு மேலாக ஏ-9 வீதி தொடர்பாகவும் ஒன்றுக்கொன்று முரணான கருத்துகளையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார். அதாவது இணைத்தலைமை நாடுகளின் கூட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்தவேளையில் ஏ-9 பாதை திறக்கப்படுவதை விடுதலைப் புலிகள் எதிர்த்தாலும்கூட தற்போது வடபுலத்து சமய அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகளின் ஒத்துழைப்புடன் வடபகுதிக்கு ஏ-9 பாதையூடாக பொருள்களை அனுப்ப அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக அமைச்சர் தெரிவித்திருந்தார். அதே அமைச்சர் பிறிதொரு தடவை ஏ-9 வீதி தொடர்பான அரசின் நிலைப்பாட்டில் எந்தவொரு மாற்றத்துக்கும் இடமில்லையென்றும் கருத்துவெளியிட்டார்.

இந்தவகையில், இணைத்தலைமைகளின் கருத்து வெளிப்பாட்டைத் திரித்துக் கூறியுள்ள தன் வாயிலாகவும் ஏ-9 வீதி தொடர்பாக வெளிப்படுத்திய முரண்பாடான கருத்து வெளிப்பாடுகள் வாயிலாகவும் அரசு இந்நாட்டின் குடிமக்களை மடையர்களாக்கியுள்ளது என்றே கருதமுடிகிறது. நாட்டில் நிலவும் உண்மையான நிலைமை தொடர்பான உண்மையான தகவல்களை நாட்டுமக்களுக்குத் தெரிவிக்கவேண்டியது அரசொன்றின் கடமையும் பொறுப்புமாகும். ஆனால், அந்த உண்மைநிலையை மக்களுக்கு மறைத்து அந்த உண்மையைத் திரிவுபடுத்திக் கூறுவது எந்தளவுக்கு நல்லொழுக்கச் செயற்பாடு என்பது ஆராயப்படவேண்டியதொன்றே.



### அவலநிலைக்குக் காரணம் சரியானசெயல்முறைகளைக் கைக்கொள்ளாமையே

மறுபுறத்தில் ஓராண்டுகாலத்துக்கு முன்னர், சுமுகநிலை நிலவிய நாட்டை யுத்தமொன்றில் இழுத்துவிடுவதற்கு வழிசமைத்ததும் இவ்வாறான பொறுப்பற்ற விதமான கருத்துவெளிப்பாடுகளும் நடைமுறைகளுமேயாகும். சரியான நோக்கு, கொள்கை, செயல்முறைகள் என்பவற்றைக் கடைக்கொள்ளாது அதிகார ஆசையை முன்னிலைப்படுத்தி செயல்படுவதே இத்தகைய அவலநிலை ஏற்படநேர்வதற்கான அடிப்படைக் காரணமாகும். ஆனால், இன்று அவற்றின் பெறுபேறுகள் நாட்டுக்கு ஏற்படுத்தியுள்ள நட்டத்துக்கு ஈடுசெலுத்துவோர் அத்தகைய பொய்ப்பிரசாரங்களை நாட்டில் பரப்பிய பிரமுகர்கள் அல்ல. இந்நாட்டின் எதிர்காலப் பொறுப்புகளைச் சுமக்கவிருக்கும் பாதுகாப்புப் படையினரும் வடக்குக் கிழக்கின் பொதுமக்களுமேயாகும்.

ஆனால், இந்த உண்மையை இந்நாட்டு மக்கள் உணர்ந்துகொள்ளத் தவறுவதே கவலைக்குரிய விடயமாகும். காலம் கடந்தேனும் அந்த உண்மையை நாட்டுமக்கள் புரிந்துகொள்ளும் காலம் தற்போது கனிந்துள்ளது என்பதை இறுதியாகக் கூறிக்கொள்ளவேண்டியுள்ளது. ✱

---

## சாவகச்சேரியில் பெற்றோல் விநியோகம்

தென்மராட்சி,நவ.29

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிலையத்தில் நான்காம் கட்ட பெற்றோல் விநியோகம் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நிலையத்தில் பெற்றோல் பெறுவதற்கு வழங்கப்பட்ட அனைத்து எரிபொருள் பங்கீட்டு அட்டைகளுக்கும் வழங்கக்கூடிய பெற்றோல் இம்முறை கிடைத்துள்ளதால் பெற்றோல் பெறுவதற்கு முண்டியடிக்க வேண்டாமென பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன் கேட்டுள்ளார்.

(203)

## நகரில் சைக்கிள்களை நிறுத்த மக்கள் இடம்தேடி அலைகின்றனர்

நல்லூர்,நவ.29

யாழ்.நகரப் பகுதிக்கு வரும் மக்கள் தமது துவிச்சக்கர வண்டிகளையோ மோட்டார் சைக்கிள்களையோ நிறுத்துவதற்கு முடியாத நிலையில் உள்ளனர்.

கடைகளில் இவ்விடத்தில் சைக்கிள்களை நிறுத்தவேண்டாம் என்ற அறிவிப்பு விழிப்பாகத் தொங்கவிடப்பட்டுள்ளது.

இதனால் தமக்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்காக கடைகளுக்குச் செல்லும் மக்கள் தமது சைக்கிள்களை நிறுத்துவதற்கான இடத்தைத் தேடி அலைவதைக் காணக்கூடியதாக உள்ளது. (203-111)

## வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல்கள் இன்னமும் காட்சிப்படுத்தப்படவில்லையாம்

நல்லூர்,நவ.29

வர்த்தக நிலையங்களில் பொதுமக்கள் பார்வைக்கு விலைப்பட்டியல்கள் வைக்கப்படவேண்டுமென அரச அதிபர் அறிவுறுத்தல் விடுத்தபின்னரும் விலைப்பட்டியல்கள் காட்சிக்கு வைக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல்கள் வைக்கப்படவேண்டும் எனவும் -

நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேலதிகமாக விலை கூட்டி விற்பனை செய்வது சட்டவிரோதமானது என்றும் - அரச அதிபர் அறிவித்திருந்தார். இருந்தபோதிலும் யாழ். நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் உள்ள வர்த்தக நிலையங்களில் இதுவரை விலைப்பட்டியல்களை வைத்து உரிய விலைகள் குறிப்பிடப்படவில்லை.

இதேசமயம் அரச அதிபரின் அறிவுறுத்தல் காரணமாக மாயமாய் மறைந்திருந்த நடைபாதைக் கடைகள் சில மீண்டும் தமது விற்பனையை ஆரம்பித்துள்ளன.

இக்கடைகளில் சவர்க்காரம் ஒன்று 70 ரூபாய் நுளம்புத்திரி ஒரு பெட்டி 130 ரூபாவாகவும் அத்துடன் புளி, தேங்காய் எண்ணெய் போன்றவை அதிகரித்த விலைகளிலும் விற்பனை செய்யப்படுகின்றன.

நகரை அண்டிய சில கடைகளில் குத்தரிசி ஒரு கிலோ 135 ரூபாவுக்கு விற்பனை செய்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

விலைக்கட்டுப்பாடு, திடீர் பரிசோதனைகள் குறித்த செய்திகள் வெளியானபோதும் பொதுமக்கள் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் பார்க்க பலமடங்கு கூடிய விலைகள் கொடுத்தே பொருள்களை வாங்கவேண்டியுள்ளதென விசனம் தெரிவிக்கின்றனர். (203-111-79)

## கல்வியியல் கல்லூரி ஆசிரிய மாணவருக்கு

யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியின் உள்ளக பயிற்சி ஆசிரிய மாணவர்களுக்கான இம் மாதக் கொடுப்பனவு இன்று புதன் கிழமை பிற்பகல் ஒரு மணிக்குக் கல்லூரியில் வைத்து வழங்கப்படவுள்ளது.

மாணவர்கள் பயிற்சியின்போது வைத்திருந்த ஆவணங்கள் அனைத்தையும் கொண்டுவருமாறு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கேட்டுள்ளார்.

(202)

## உள்ளூராட்சி ஓய்வூதியர் வவுச்சர் வரவில்லையாம்

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கு நவம்பர் மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் இதுவரை வந்துசேரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

நவம்பர் 9ஆம் திகதி நவம்பர் மாதத்திற்குரிய ஓய்வூதிய தினமென அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் இதுவரை வவுச்சர்கள் தமக்கு வந்துசேரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

கப்பல்களில் தபால் பொதிகள் கொண்டுவரப்படுகின்ற போதிலும் ஓய்வூதிய வவுச்சர்கள் அடங்கிய பொதிகள் இதுவரை கொண்டுவரப்படவில்லை எனவும் -

குடாநாட்டில் உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்ற இவ்வேளையில் ஓய்வூதியம் கிடைக்காததால் சங்கக் கிளைக் கடைகளில் வழங்கப்படும் பொருள்களைப் பெற முடியவில்லை எனவும் - ஓய்வூதியர்கள் கவலை தெரிவித்தனர்.

(203)

## சந்தைகளில் அதிகளவு மீன் விலை மட்டும் இறங்கவில்லை

யாழ்.நகரில் உள்ள மீன் சந்தைகளுக்கு அதிகமான மீன்கள் எடுத்துவரப்பட்ட போதும் மீன்களின் விலையில் சிறிய அளவில் கூட மாற்றம் ஏற்படவில்லை.

தொடர்ந்தும் அதி உச்ச விலைகளிலேயே கடல் உணவுப் பொருள்களை விற்பனை செய்வதில் வியாபாரிகள் நாட்டம் கொண்டுள்ளனர்.

இதனால், மீன் வகைகளுக்கு குறிப்பிட்ட அளவு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரியுள்ளனர்.

தற்போது மழைகாலம் என்பதால் கூடுதலான மீன்கள் பிடிக்கக் கூடியதாக உள்ளது எனவும் தீவுப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் மீன்சந்தைகளுக்கு மிகவும் கூடுதலான மீன்கள் தினமும் எடுத்துவரப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது. (203-111)


## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



சிவச்சந்திரன்(சிவா) - மதிவதனி(மதி)
தம்பதியரின் செல்வப் புதல்வன்

**தாருஜன்**

தனது முதலாவது பிறந்த நாளை சுன்னாகம் தெற்கில் இன்று (29.11.2006) புதன்கிழமை அவரது இல்லத்தில் அப்பா-அம்மாவுடன் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார். தாருக் குட்டியை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரிய அம்மப்பா, பெரிய அம்மம்மா, புன்னாலைக்கட்டுவன் நாதன் பெரியப்பா, புஸ்பா பெரியம்மா, மாலினிச் சித்தி, நாகநாதர் பாட்டா, சின்னத்தம்பி பாட்டா, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த அப்பப்பா, அப்பம்மா, கவிச் சித்தப்பா, செல்வன் சித்தப்பா, அப்பப்பாவின் பூட்டியும், அப்பம்மாவின் பூட்டியும், லண்டனில் வசிக்கும் அப்பன் மாமா குடும்பத்தினர், சூட்டி மாமா, சபேசன் மாமா, சுவிஸில் வசிக்கும் றஞ்சன் மாமா குடும்பத்தினர், பிரான்ஸில் வசிக்கும் ஞானலிங்கம் மாமா, நந்தினி அத்தை குடும்பத்தவர், மைத்துனர்களான கௌதமன், லக்ஸன், மைத்துனி ஜனனி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் சுன்னாகம் தெற்கு பூதவராயர் அருள் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: திரு.திருமதி சிவச்சந்திரன் மதிவதனி.

(55638)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முன்னாள் உப அதிபர் திருமதி அங்கையற்கண்ணி சிவப்பிரகாசபிள்ளை அவர்களின் அன்புக் கணவரும், கல்லூரியின் பழைய மாணவி சிவசக்தி சிவனேசன் அவர்களின் பாசமிகு தந்தையுமாகிய

**சின்னையா சிவப்பிரகாசபிள்ளை**

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காவும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

யா/இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம். (55640)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், கல்விசார ஊழியர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முன்னாள் உப அதிபர் திருமதி அங்கையற்கண்ணி சிவப்பிரகாசபிள்ளை அவர்களின் அன்புக் கணவரும், கல்லூரியின் பழைய மாணவி சிவசக்தி சிவனேசன் அவர்களின் பாசமிகு தந்தையுமாகிய

**சின்னையா சிவப்பிரகாசபிள்ளை**

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காவும் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

யா/இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம். (55639)

பழைய மாணவர் சங்கம்.

## அந்தியேட்டி அழைப்பும் பிரார்த்தனையும்

மலர்வு 27 ★ 04 ★ 1930



உதிர்வு 30 ★ 10 ★ 2006

**அமரர் வீரபாகு செல்வராசா**

கடந்த 30.10.2006 திங்கட்கிழமை உடுவில் தெற்கு, பாலாவோடையில் காலமான எமது குடும்பத் தலைவர் வீரபாகு செல்வராசா அவர்களின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை இன்று (29.11.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது உடுவில் தெற்கு பாலாவோடை இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: மனைவி, செ.பாஸ்கரன் (சுவிஸ்), செ.பிரபாகரன், (சுவிஸ்) செ.சுதாகரன் (சுவிஸ்), செ.வசிகரன் (சுவிஸ்), நிருபாராணி (மகள்), ஞானகாந்தன் (மருமகன்), மருமக்கள், இரத்தினமணி (சகோதரி).

உடுவில் தெற்கு,
பாலாவோடை,
மானிப்பாய். (55329)

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 30 - 09 - 1930



கந்தன் காலடியில் 29 - 11 - 2003

**அமரர் சின்னத்தம்பி திருநாவுக்கரசு**

*(6ஆம் திருவிழா உபயகாரர், பொலிகண்டி கந்தவனக் கோயில்)*

36 மாதங்கள் சென்றன ஐயா உன்பாசமுகம்
எம் நெஞ்சை விட்டு நீங்காது
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி! !!

தொண்டைமானாறு வீதி,
அச்சுவேலி.

அன்னமுத்து (மனைவி),
லோகநாதன் (மகன்- கனடா), தங்கராணி (மருமகள்),
பிரசாந், அனுசாந், அனுசாந்தி (பேரப்பிள்ளைகள்).

(சி.50487)

## மரண அறிவித்தல்

### *இராசம்மா சுப்பிரமணியம்*

அளவெட்டியைச் சேர்ந்த இராசம்மா சுப்பிரமணியம் 25.11.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் கணேசரத்தினம் (கனடா), காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், சித்திரா, கலைவாணி ஆகியோரின் பாசமிகு தாயும், வித்தியானி (கனடா), கஜாளினி (கனடா), கர்ஷினி (கனடா), காலஞ்சென்ற கபிலன், வல்லபை (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சுருதி (கனடா) யின் பூட்டியும் குகஞானசோதி (கனடா), பாலச்சந்திரன் (கனடா) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம், பொன்னம்மா, கார்த்திகேசு, ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.11.2006 ஞாயிற்றுக்கிழமை அளவெட்டியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'முருகபவன்',
கேணிக்கரை,
அளவெட்டி. (55644)

தகவல்:
சி.ஸ்ரீஸ்கந்தராஜா
(பேரமகன்).

## சாவகச்சேரி நகரசபைக்கு நீர் இறைக்கும் இயந்திரம்

தென்மராட்சி,நவ.29

சாவகச்சேரி நகர குடிதண்ணீர் விநியோகத் திட்டத்திற்கென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் நீர் இறைக்கும் இயந்திரத்தினை அண்மையில் சாவகச்சேரி நகரசபையிடம் கையளித்துள்ளனர்.

'நீர்ப்' நிறுவனத்தினரால் நகர குடிதண்ணீர் விநியோகத்திற்கென வழங்கப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரம் கடந்த மார்ச்மாதம் பழுதடைந்ததையடுத்து நீரிறைக்கும் இயந்திரம் மூலம் நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

அண்மையில் ஏற்பட்ட எரிபொருள்கள் தட்டுப்பாட்டினையடுத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் விடுத்த வேண்டுகோளையடுத்து புதிய நீரிறைப்பு இயந்திரம் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (203)

## உடுவில் கமநல பிரிவில் கிருமிநாசினி விநியோகம்

உடுவில் கமநலசேவை நிலையத்தில் விவசாயிகளுக்குத் தேவையான கிருமிநாசினிகளும் களை நாசினிகளும் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் இவற்றை விவசாயிகள் தத்தமது விவசாயிகள் சம்மேளனத்தின் சிபார்சுடன் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் உடுவில் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். இதேவேளை - உரமானிய திட்டத்தின் கீழ் வழங்கப்படவேண்டிய யூரியா உரத்தையும், ரி.டி.எம்., வி-1 போன்ற உரங்களையும் பெற்றுத்தருமாறு உடுவில் கமநல சேவை நிலைய விவசாயிகள் சம்மேளனங்களின் நிர்வாகசபை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (135)


**வீடு வாடகைக்கு**

அமைதியான சகல வசதிகளுடன் வீடு யாழ்.நகர மத்தியில் (சயன்ஸ் கோல் இற்கு அருகில்) வாடகைக்கு உண்டு.

விவரங்களுக்கு: 61, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:- 222 9544. (55646)

**சிறு விமான சேவை**

யாழ். - கொழும்பு விமான சேவைகள்

தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது. உடனடிப் பயணம்.

தொடர்பு:- தொ.பே.: 0112721789, 0114964994, 0785788811, 0785325501.

(சி/50463)

**விஜி ஹெய்கூல் எஞ்ஜினியர்ஸ்**

சகல விதமான குளிர்சாதனங்களையும் (Refrigerator. A/C) வீட்டிலேவந்து திருத்திக் கொடுக்கப்படும்.

தொடர்புகட்கு - க.விஜிட்
மூளாய் றோட், வட்டுக்கோட்டை.

**விற்பனைக்கு**

1000இற்கும் மேற்பட்ட தமிழ்ப்படப் பிரதிகள் (அனைத்தும் SKC ANTIFUNG 45) பதிவு செய்யப்பட்டவை. 1000க்கும் மேற்பட்ட பிரமிட், ஐங்கரன், கொலம்பியா தமிழ்ப்பட CDக்கள் (அனைத்தும் 3cd கண்ணாடிக் கவருடன்) விற்பனைக்கு.

தொடர்பு : 021 222 4257 (55702)


## கண்ணீர் அஞ்சலி



புங்குடுதீவு புகழ் பூத்த வைத்திய கலாநிதியும் மண்ணின் மைந்தனுமான

அமரர்
**சின்னத்தம்பி கணேஸ்**
அவர்கள்

மருத்துவத்தின் மாண்புதனை மண்ணுக்காய் உவந்தளித்து
மாணித்த மனிதத்தின் ஆன்மா என்றும்
ஆண்டவன் அடியில் சேர அஞ்சலிக்கிறோம்.

எஸ்.கே.சண்முகலிங்கம் (J.P),
அதிபர் ஸ்ரீ கணேசா வித்தியாலயம்,
குடும்பத்தினர்.

புங்குடுதீவு-3. (55649)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் கல்விசாரா ஊழியர் கதிரவேலு புஸ்பராசாவின் பாசமிகு தாய்

**திருமதி தங்கம்மா கதிரவேலு**

அவர்கள் காலமான செய்தி அறிந்து மிக்க கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!

நலன்புரிக் கழகம்,
யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி,
புத்தூர். (55645)

## நாலாம் வருட நினைவுத்துளிகள்



நெடுந்தீவைச் சேர்ந்த
அமரர் **தனுக்கோடி புண்ணியமூர்த்தி**
*(இளைப்பாறிய அரச மருந்துக் கலவையாளர்)*
**திதி: 29.11.2006**

வையத்துள் குழந்தையாக
05.01.1926

தெய்வத்துள் தீபமாக
15.12.2002

அல்லும் பகலும் அயராது உழைத்திருந்து
தொல்லைகள் தீர்க்கத் துடியாய் துடித்தெழுந்து
அல்லல் வரும்போது அரவணைக்க யாருமின்றி
வேரோடு சாய்ததனால் வாடுகின்றோம் நாமிங்கு
ஆண்டுகள் நான்கு அகன்றோடிவிட்டாலும்
ஆழ்மனதில் அன்புமுகம் மறைந்திடவில்லையே!

*நாலாண்டின் முடிவதனில்*
*நலமோடு சாந்திபெற*
**குடும்பத்தினர்.**

*77, சாஸ்திரியார் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.* (55643)

## ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம் (வரையுள்ளது)

### பதவி வெற்றிடம்
### களஞ்சியப் பொறுப்பாளர்

| | |
|---|---|
| 1) சம்பள குறியீட்டு இல. | : 202/13 |
| 2) சம்பளத் திட்டம் | : 7750/= 75x10-80x10-9300/= |
| 3) வயது எல்லை | : 25 தொடக்கம் 45 வரை |
| 4) விண்ணப்ப முடிவு திகதி | : 15.12.2006 |
| 5) பிணை | : ரொக்கம் ரூ. 15000/= ஆதனம் ரூ. 25000/= அல்லது ரொக்கம் ரூ. 15000/= |

6] 1] சங்க எல்லைப்பரப்பில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

2] சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

3] வேறு சங்கங்களிலிருந்து விண்ணப்பிப்பவர்கள் சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

7] தகைமைகள்:

1] கூட்டுறவுப் பணியாளர் 2002/14 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப் பட்ட பகுதியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 202/15 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட பகுதியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் சா/தரம் சித்தி அல்லது க.பொ.த. [சா.தர] தமிழ், கணிதம்/வர்த்தக கணிதம்/எண் கணிதம் உட்பட 4 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியும், மேற்குறித்த பதவியில் 2 வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

8] விண்ணப்பங்கள் யாவும் 'பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம், ஊர்காவற்றுறை' என்ற முகவரிக்கு நேரிலோ, பதிவுத்தபாலிலோ 15.12.2006ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

பொது முகாமையாளர்,
ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம்,
ஊர்காவற்றுறை. (சி/50482)

## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அழுக்குத் துணிகளைக் கழுவுதல் - ஆண்டு-2007

*யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை கேள்விச் சபைத் தலைவரால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு 2007 ஆம் ஆண்டுக்கான அழுக்குத் துணிகளை கழுவுவதற்காக சீலிடப்பட்ட கேள்விகள் கோரல்*

1) பிரதேச செயலாளர்களிடமிருந்து பெறப்பட்ட பொது 170 படிவத்தில் சொத்துச் சான்றிதழ் மற்றும் ரூபா 500 ஐ மீளளிக்கப்படாத கேள்வி வைப்பாக வைத்தியசாலை கணக்காளர் அலுவலகத்தில் செலுத்திப் பெறப்பட்ட பொது 172-பற்றுச்சீட்டுடன் தமது அடையாள அட்டையையும் காண்பித்து 05.12.2006 பிற்பகல் 2 மணிவரை கேள்விப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

2) கேள்விகள் அடங்கிய தபால்கள் சீலிடப்பட்டு இடதுபக்க மேல் மூலையில் 2007 ஆம் ஆண்டிற்கு அழுக்குத் துணிகளைக் கழுவுதல் எனக் குறிப்பிட்டு பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 06.12.2006 முற்பகல் 10 மணி அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ இப்பணிமனைக் கேள்விப்பெட்டியில் இடலாம்.

3) கேள்விகள் மூடப்பட்டதும் உடனடியாக அதே இடத்தில் கேள்விகள் திறக்கப்படுவதோடு, கேள்விதாரர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் அச்சந்தர்ப்பத்தில் சமுகமளிக்கலாம்.

4) கேள்விகளுடன் சம்பந்தப்பட்ட கேள்விப்பிணை அல்லது பெறுமதிமிக்க சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பெயருக்கு பணம் வைப்பிட்டு பெறப்படும் பற்றுச்சீட்டின் மூலப்பிரதி மற்றும் சுகாதாரசேவைப் பணிப்பாளர், சுகாதார வைத்திய அதிகாரியின் சான்றிதழையும் இணைத்திருத்தல் வேண்டும்.

5) மேலதிக விவரங்களுக்கு போதனா வைத்தியசாலைக் கணக்காளருடன் தொடர்புகொள்ளவும்.

*வைத்திய கலாநிதி ஏ.ஏ.ஞானஜோதி*
*பணிப்பாளர்,*
*போதனா வைத்தியசாலை,*
*யாழ்ப்பாணம்.* (சி/50485)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுவோரில் 50 வீதமானோர் வைரஸ் காய்ச்சல் நோயாளர்

யாழ்ப்பாணம்,நவ.29

யாழ்.போதனா வைத்தியசாலையில் வார்ட் அனுமதி பெறுவோரில் 50 வீதமான நோயாளர்கள் 'சிக்குன் குனியா'வை ஒத்த வைரஸ் காய்ச்சல் நோயால் பாதிக் கப்பட்டவர்களாகவே இருக்கின்றனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த சனிக்கிழமை 4ஆம் வார்ட்டில் மட்டும் 41 பேர் இந்தவகை நோயால் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் ஞாயிற்றுக்கிழமை 29 நோயாளர் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுள் 13 பேர் ஞாயிற்றுக்கிழமையும் 8 பேர் திங்கட்கிழமையும் வீடு சென்றுள்ளனர்.

இதைவிட வேறு வார்ட்டுகளிலும் நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநோயாளர் பிரிவிலும் அதிகமானோர் வைரஸ் காய்ச்சல் காரணமாக சிகிச்சை பெற்று வருகின்றனர் - என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203-88-111)

# குடாநாட்டில் 11கடைகளை படையினர் ஆரம்பித்துள்ளனர்

யாழ்ப்பாணம், நவ. 29

குடாநாட்டு மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் 11 நலன்புரி வர்த்தக நிலையங்களை படையினர் திறந்துள்ளனர் என பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கடந்த ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணம், முகமாலை, ஊர்காவற்றுறை, மண்டைதீவு ஆகிய பகுதிகள் மீது தாக்குதலைத் தொடுத்தனர்.

இதனால் ஏ-9 பாதை போக்குவரத்துக்குத் தடைப்பட்டு அந்த வழியாக பொருள்கள் கொண்டுவருவதும் தடைப்பட்டது.

இதன்காரணமாக தனியார் வர்த்தகர்கள் கூடுதல் விலைக்குப் பொருள்களை விற்பனை செய்ததால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

இதனைக் கருத்திற்கொண்டு அரசாங்கமும் இராணுவமும் இணைந்து மக்களுக்குத் தேவையான அத்தியாவசிப் பொருள்களைக் கப்பல் மற்றும் விமானம் மூலம் கொண்டுவந்தன.

அப்பொருள்களை யாழ். அரச அதிபர் ஊடாகக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவை தவிர யாழ். பிராந்திய இராணுவத் தளபதியின் ஆலோசனையின் பேரில் 51ஆவது படைத் தளபதி மற்றும் ஏனைய படையணித் தளபதிகள் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் கட்டுப்பாட்டு விலையில் உணவுப் பொருள்களை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதற்கென அச்சுவேலி, நீர்வேலி, ஊரெழு, நாவாந்துறை, மானிப்பாய், சுன்னாகம், யாழ். ஸ்ரான்லி வீதி, யாழ். ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குளி பஸ்ரியன் ஹோட்டல் சந்தி, கொழும்புத்துறை ஆகிய இடங்களில் நலன்புரி வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

நடமாடும் சேவையின் மூலம் மக்களுக்குப் பொருள்களை விநியோகிப்பதற்கான வசதியும் செய்யப்பட்டுள்ளது. - என்றுள்ளது.

# டக்ளஸ் சபைக்கு வரவில்லை அவரது அமைச்சுக்கு ஒதுக்கீடு

கொழும்பு, நவ. 29

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்துக்கு வருகை தராத நிலையில் அவரது சமூக சேவைகள், சமூக நலனோம்பு அமைச்சின் நிதி யொதுக்கீட்டு சட்டமூலம், சபையில் நிறைவேற்றப்பட்டது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலனோம்பு அமைச்சு உட்பட ஐந்து அமைச்சுக்களின் நிதியொதுக் கீட்டுச் சட்டமூலங்கள் மீதான விவா தம் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலனோம்பு அமைச்சு தொடர்பாக எந்தவொரு எம்.பியும் பேசவில்லை. இந்த அமைச்சின் பிரதியமைச்சர்கள் இருவரும் சபையில் இருந்தனர். பிரதியமைச்சர் ஜகத் புஷ்பகுமார அமைச்சரின் சார்பில் பதிலளித்துப் பேசினார்.

(ஐ)

# தென்மராட்சி வலய ஜி.சீ.ஈ.தர மாணவர்களுக்கு விசேட பரீட்சை

யாழ்ப்பாணம்,நவ.29

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கல்விகற்கும் ஜி.சீ.ஈ.(சாதாரண) தர மாணவர்களுக்கான விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாட விசேட பரீட்சை நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

வலயத்தின் முன்னணி ஆசிரியர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இப்பரீட்சை மூலம் மாணவர்களின் வினைத்திறனை விருத்தி செய்து பரீட்சைக்குத் தயார்படுத்த முடியும் என்று தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தார்.

(202)



புலவர் ம.பார்வதிநாதசிவம் எழுதிய 'மானம் காத்த மறக்குடி வேந்தன்' என்னும் கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நூலாசிரியர் புலவர் ம.பார்வதிநாதசிவம் அவர்களுக்கு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனால் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுவதை முதலாவது படத்திலும் -

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரன் தலைமையுரை நிகழ்த்த மேடையில் ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம், சைவப்புலவர் சு.செல்லத்துரை, வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், நூலாசிரியர் புலவர் ம.பார்வதிநாதசிவம், இ.சங்கர் ஆகியோர் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

இதில் நூல் வெளியீட்டுரையை வலிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் நிகழ்த்தினார். (203)

# சர்வ கட்சி மாநாடு இந்த வாரம் கூடும்

கொழும்பு,நவ.29

சர்வ கட்சி மாநாடு இந்த வாரத்திற்குள் மீண்டும் கூட இருப்பதாகக் குழுவின் தலைவரும், அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வின் மூலமே தீர்வு காண முடியு மென்றும், இதில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகள் ஏகமனதாக இணக்கம் தெரிவித்தனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இக்குழுவில் ஐ.தே.கட்சி அங்கம் வகிக்காமையினால் தீர்மானம் குறித்து அவர்களுடன் மட்டும் கலந்துரையாடவில்லை என்றும் இறுதி அறிக்கை தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடப்படும் என வும் அவர் தெரிவித்தார்.

(ஐ)

# போஷாக்குத் திட்டத்துக்கான கோன்சோயா கொழும்பிலிருந்து கப்பல் மூலம் தருவிப்பு

## யாழ். சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,நவ.29

உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் சுகாதாரத் திணைக்களத்தால் நடைமுறைப் படுத்தப்படும் தாய் - சேய் நல போஷாக்குத் திட்டத்திற்கென அரச அதிபரின் முயற்சியால் கொழும்பிலிருந்து கோன் சோயா கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளது என யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

எடுத்துவரப்பட்ட கோன் சோயாவில் 113 மெற்றிக்தொன் சுகாதாரத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இத்தொகுதி யாழ். மாவட்டத்திலுள்ள 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மார் ஆகியோருக்கு அடுத்த 2 மாதத்திற்கு வழங்கப் போதுமானதாகும்.

இத்திட்டத்தின் பயனாளிகளுக்கான கோன் சோயா விநியோகம் இவ்வாரம் ஆரம்பிக்கப்படும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(202)

# கோட்டை, கொட்டடியில் பங்கீட்டு அட்டை மீளாய்வு

யாழ். பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோட்டை (ஜே/81), கொட்டடி (ஜே/83) ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்கான பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் கொட்டடி நமசிவாய வித்தியாசாலையில் பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்படும்.

தேசிய அடையாள அட்டை, பங்கீட்டு அட்டை, குடும்ப அட்டை போன்ற ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களைச் சமூகம் தருமாறு யாழ். பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் கேட்டுள்ளார்.

(1-202)

# இணைப்பைப் பற்றிய உறுதியை இந்தியா மஹிந்தரிடமிருந்து எதிர்பார்க்கின்றது

இந்தியாவுக்கு விஜயத்தை மேற்கொண்டிருக்கும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளை புதுடில்லியில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசுகின்றார்.

இலங்கை இனப்பிரச்சினையும், அதை ஒட்டிய விவகாரங்களுமே இரு நாட்டுத் தலைவர்களின் இந்தச் சந்திப்பின்போது முக்கிய இடம்பிடிக்கப் போகின்றன என்பது திண்ணம்.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாகப் பல்வேறு விடயங்களை இந்தியத் தரப்பு இந்தச் சந்திப்பின்போது இலங்கை அரசுத் தலைவருக்கு முன்வைத்துச் சுட்டிக்காட்டும் என்றாலும் அவற்றுள் பிரதானமாக இடம்பெறப்போவது ஈழத் தமிழர் தாயகமான வடக்கும், கிழக்கும் ஒன்றிணைந்திருக்க வேண்டும் என்ற அம்சம் தான் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இது விடயத்தில் இந்தியாவின் திட்டவட்டமான நிலைப்பாடு, ஏற்கனவே சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை, இந்திய வெளியுறவுச் செயலாளர் சிவசங்கர் மேனன் சந்தித்துத்துப் பேசியபோது தெளிவாகத் தெரிவிக்கப்பட்டு விட்டது.

இவ்விவகாரத்தில் இலங்கை அரசுத் தலைமையின் முடிவு என்ன - தீர்மானம் என்ன - என்பதைத் தெளிவாக அறிவதற்கு இரு நாட்டுத் தலைவர்களின் இப்போதைய சந்திப்பை எதிர்பார்த்துப் புதுடில்லி காத்திருப்பதாகவும் தெரிகின்றது.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை வடக்கு - கிழக்கு மாகாணங்கள் அவர்களின் பூர்வீகத் தாயகம். அதைக் கூறுபோடும் எந்த முயற்சிக்கும் அவர்கள் இணங்க மாட்டார்கள். கேள்விக்கு உட்படுத்த முடியாத அடிப்படை விவகாரமாகவே அவர்கள் இணைப்பைக் கருதுகின்றார்கள்.

வடக்கு - கிழக்கைப் பிரிக்கும் எந்த யோசனைக்கும் தமிழர்கள் இணங்கவே மாட்டார்கள் என்பதும், அதையும் மீறி பிரிப்பு தம் மீது திணிக்கப்பட்டால் அதற்கு எதிராக அவர்கள் முரண்டு பிடிப்பார்கள் என்பதும், அவ்வாறு பிரிக்க முயல்வது தமிழர்களுக்கு இழைக்கப்படும் சரித்திர பூர்வமான துரோகம் என்பதும் இந்தியா உட்பட சர்வதேச சமூகத்துக்கு நன்கு தெரியும்.

ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை ஈழத் தமிழர்களின் பூர்வீகத் தாயகம், அந்த மக்களின் அனுமதியின்றி - இணக்கமின்றி - கொழும்பு நிர்வாகத்தால் பலவந்தமாகப் பிரிக்கப்படுவது, ஈழத் தமிழர்களுக்குச் செய்யப்படும் அநீதி மட்டுமல்லாமல், இந்தியாவின் கொள்கை நிலைப்பாட்டுக்கும் விழுந்த அடியாகவும் அமையும்.

ஏனென்றால், இந்த இணைப்பை அந்நாடு எழுத்து மூலமான சர்வதேச ஒப்பந்தம் ஒன்றின் மூலம் இலங்கையோடு உறுதி செய்து கொண்டிருக்கிறது.

அந்த ஒப்பந்தத்தை உதாசீனம் செய்யும் வகையில் ஈழத் தமிழர் தாயகத்தைக் கொழும்பு அரசு துண்டாடுவது, இந்தியாவுக்கு எழுத்து மூலம் உறுதியளித்த விவகாரத்தை இலங்கை ஒதுக்கித் தள்ளி, துச்சமாக மதித்து, நிராகரித்தமைக்குச் சமனாகும்.

எனவேதான், இணைப்பை உறுதிப்படுத்த வலியுறுத்தி நிற்கின்றது இந்தியா.

வடக்கையும், கிழக்கையும் ஒரே நிர்வாக அலகின் கீழ் கொண்டு வரும் உத்தரவு, இப்போது இலங்கை உயர் நீதிமன்றத்தினால் செல்லுபடியற்றதாக்கப்பட்டிருப்பதால் பிரச்சினை எழுந்திருக்கின்றது.

வடக்கையும், கிழக்கையும் ஒரு நிர்வாக அலகாக இணைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கை முறைமைதான் தவறானது என்று உயர் நீதிமன்றம் கூறியிருக்கின்றது. வடக்கும், கிழக்கும் இணைக்கப்படுவது தவறானது என்று உயர் நீதி மன்றம் கூறவில்லை. அது மட்டுமல்ல. நாடாளுமன்றச் சட்டம் ஒன்றின் மூலம் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாகா ணங்களை நிர்வாக ரீதியாக ஒன்றிணைப்பதற்கு அரசமைப்பில் இடமிருப்பதையும் உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருக்கின் றது.

ஆகவே, இவ்விவகாரத்தில் சட்ட நடவடிக்கை முறையில் ஏற்பட்ட தவறை சட்ட ரீதியாகத் திருத்தி, வடக்கையும், கிழக்கையும் - தமிழர் தாயகத்தை - ஒன்றிணைக்கும் செயற்பாட்டைச் சுலபமாக நிறைவேற்ற முடியும் என்பதே யதார்த்த நிலைமையாகும்.

ஆனால், பௌத்த - சிங்களப் பேரினவாதிகளின் கைப்பொம்மையாக இயங்கும் மஹிந்தரின் அரசினால அந்த நியாயச் செயற்பாட்டைத் தமிழர்களுக்காக ஆற்ற முடியுமா என்பதே கேள்வியாகும்.

வடக்கு - கிழக்கை இணைப்பதற்கான புதிய சட்டமூலம் நாடாளுமன்றுக்குக் கொண்டு வரப்படுமானால் கேள்விக்கு இடமின்றி அதற்கு முழு ஆதரவு தரமுடியும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவரு[illegible] தேசியக் [illegible] இரா. சம்பந்தனுக்கு உறுதியளித்திருக்கின்றார் என்று செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இந்நிலையில், இத்தகைய உத்தேச சட்டமூலத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, மேலக மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அரசில் இடம் பெற்றுள்ள ஈ.பி.டி.பி. போன்ற வற்றின் ஆதரவையும் சுலபமாகப் பெற்றுக் கொள்ளும் ஏது நிலையே காணப்படுகின்றது.

ஆக, அரசுத் தரப்பை விட்டால், எஞ்சியுள்ள பௌத்த - சிங்கள மேலாதிக்கப் போக்குடைய ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற இனவாதக் கட்சிகளே அத்தகைய சட்ட மூலத்தை நாடாளுமன்றில் எதிர்க்கும் நிலை இருக்கும்.

இந்தப் பின்னணியில், அத்தகைய சட்டமூலத்தை அரசுத் தரப்பு கொண்டு வந்து, அதை நாடாளுமன்றில் சமர்ப்பித்து, அதை ஆதரிக்குமானால், அந்தச் சட்டமூலத்துக்கு நாடாளுமன்றில் சாதாரண பெரும்பான்மை ஆதரவு அல்ல, அதற்கும் அப்பால் மூன்றில் இரண்டு பங்கினருக்கும் கூடுதலானோரின் முழு ஆதரவும் கிட்டும் என்பதும் உறுதி.

அவ்வாறு வடக்கு - கிழக்கை இணைக்க மஹிந்தரின் அரசு தயார் என்றால், அடுத்த நிமிடமே அதை நிறைவு செய்ய முடியும் - எந்த அரசியல் இடைஞ்சலும், தலையீடுமின்றி. அதற்கேற்ற வகையிலேயே நாடாளுமன்றில் பல்வேறு கட்சி களின் எண் கணித எண்ணிக்கை நிலை காணப்படுகின்றது.

எனவே, அவ்வாறு இணைப்பை உறுதிப்படுத்துவதற்கு மஹிந்த அரசு தயாரா என்பதைத்தான் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் தெரியப்படுத்தும்படி தற்போதைய புதுடில்லிச் சந்திப்பின்போது இந்தியா, இலங்கைத் தரப்பிடம் வலியுறுத்திக் கேட்கும் எனத் தெரிகிறது.

ஜனாதிபதி மஹிந்தர் என்ன பதில் கூறப்போகின்றார்? சில நாட்களில் அது அம்பலத்துக்கு வரும்.

**(நேற்றை உதயனின் சில பிரதிகளில் அன்றைய தினத்துக்கு உரிய ஆசிரியர் தலையங்கத்துக்குப் பதிலாக ஏற்கனவே (26.11.2006 இல்) வெளியான தலையங்கம் தொழில்நுட்பத் தவறு காரணமாகப் பிரசுரமாகிவிட்டது. அது குறித்து வருந்துகிறோம்.**

**நேற்றைய தினத்துக்குரிய தலையங்கத்தை இங்கே தருகிறோம்.)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழுங்கலை அற நிறுவனம்

வாழுங்கலைப் பயிற்சி எடுத்த பக்தர்களுக்கான சுதர்சன் கிரியா மற்றும் சற்சங்கம்.

இடம் : நல்லூர் கம்பன் கோட்டம்
காலம் : 29 புதன்கிழமை மற்றும்
01 வெள்ளிக்கிழமை பி.ப 3 மணி.
இடம் : யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி
காலம் : 30 வியாழன் பி.ப 3 மணி, 3 ஞாயிறு மு.ப 9 மணி.

இத்தகவலை பயிற்சி எடுத்த அனைவருக்கும் அறியத்தந்து நிகழ்வில் கலந்துகொள்ளவும்.

## யாழ். → கொழும்பு → உலக நாடுகளுக்கான துரித கடிதம், பொதிகள் சேவைகள்

யாழ். - கொழும்பு - உலக நாடுகளுக்கான எல்லா விதமான கடிதங்கள் மற்றும் பொதிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**திருமுருகன் கொம் நெற்**
259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 7835
46,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே. 222 7310

## COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

**ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்**

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repeiring ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Micro media Flash MX
Course Fee :2000/=

**ஒரே நாளில் ஆரம்பம்:- 04/12/2006 - 08.30**

ஏனைய அனைத்து கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் 01/12/2006, 02/12/2006, 03/12/2006, 06/12/2006 ஆகிய திகதிகளில் ஆரம்பமாகின்றது.

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மண்மகிழ் 10 ★ 12 ★ 1947



கண்நெகிழ 20 ★ 11 ★ 2004

**அமரர் நாகராசா பாலேஸ்வரி**
(திதி:- 29.11.2006)

எம் அன்புத் தெய்வமே!
ஆலமரமாக நின்று நிழல் தந்து விட்டு
வெயிலில் எம்மை வேகவிட்டு
நிலவாக நின்று ஒளி தந்து விதி என்ற கோட்டின்கீழ்
மதியவன் செய்த சதி வலையால்
இருட்டிலே எம்மை உறங்கவிட்டு
ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்ததம்மா
ஆனாலும் உங்கள் நினைவு எமை விட்டு அகலாது.

8ஆம் வட்டாரம், மண்டைதீவு.
பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.
(55709)

## 26ஆம் ஆண்டு நினைவாக

தோற்றம் 05 ★ 06 ★ 1928



மறைவு 29 ★ 11 ★ 1980

**அமரர் கந்தையா செல்லத்துரை**
(முன்னாள் தலைவர், அ.பொ.சே.தொ.சங்கம், யாழ்.கிளை)

எல்லாம் இருப்பினும் நீங்கள் இன்றேல் எதுவும் இல்லை எனும் படியாய் நன்றே எங்கள் நலன்கள் பேணிய நாயகனே, எம் ஒளிவிளக்கே! பொல்லா இயற்கை பிரித்து ஆண்டுகள் இருபத்தாறு போய் என்ன... என்றும் எங்கள் இதயம் முழுவதும் உங்கள் நினைவுகள்... நிறைந்திருக்கும்.

45, நக்கா லேன், கண்டிக்குளி,யாழ்ப்பாணம்.
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(55706)

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள மொறிஸ் மைனர் கார் (1000 Modal) விற்பனைக்குண்டு.
தொடர்புகட்கு:
தொ.பே:- 021 4591139
021 222 5452
(55717)

## D.V 2008 விண்ணப்பிக்கத் தவறியவர்களுக்கு

**டிசம்பர் 3 ஆம் திகதிவரை மட்டும்**



55000 பேர் ஆண்டுதோறும் தெரிவு செய்யப்படும் அமெரிக்க விசாவுக்கு விண்ணப்பிக்காதோர் பாஸ்போட் அளவு கலர் புகைப்படத்துடன் உடன் தொடர்புகொள்ளவும். விண்ணப்பப்படிவங்களை நேரில் பெற்றுக்கொண்டு விண்ணப்பத்துக்கான உறுதிப் பற்றுச்சீட்டினையும் உடன் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்பக்கட்டணம் 200ருபா மட்டுமே**

**திருமுருகன் கொம் நெற்**
259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 222 7835
46,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே.: 222 7310

## ஆலய பணியாளர் தேவை

கோப்பாய் மத்தியிலுள்ள பரி.கன்னி மரியாள் ஆலயத்திற்கு பணியாளர் (Church Keeper) தேவை. கிறிஸ்தவர் விரும்பத்தக்கது.
விண்ணப்பம் 10.12.2006 இற்கு முன்னர் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சபைக்குரு,
பரி.கன்னி மரியாள் ஆலயம்,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.
(55633)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் டாக்டராக கடமை புரியும் 31 வயது, 5' 6'' உயரம், 30கிரகபாவம், கார்த்திகை நட்சத்திரம் 4 பாகம் மணமகனுக்கு அழகிய பட்டதாரி தகைமையுடைய மணமகள் தேவை. கொழும்பு வீடு விரும்பத்தக்கது.
விளம்பர இலக்கம் 2935,
மே/பா உதயன்.
(55638)

## தவறிவிட்டது

இராஜேந்திரம் செய்சாந்தினி என்பவருடைய விஷேட அ. அட்டை (806651281V) யாழ்ப்பாணம் அருள் ஆச்சிரமத்திற்கு அருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அருள் ஆச்சிரமம், கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (55647)

## தவறவிடப்பட்டது

எனது மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் இல DLA007520291 தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட விலாசத்தில் அறியத்தருமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ப.பாலசுப்பிரமணியம் (வேலணை பாலா),
இல . 82, செட்டித்தெரு. நல்லூர். தொ.பே: 2222530

## மாபெரும் இலவசக் கருத்தரங்கு

[இவ்வருடம் O/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குரியது]

இடம்: N.C.A. கல்வி நிலையம், இணுவில்
காலம்: 03.12.2006, 04.12.2006
(ஞாயிறு, திங்கள்)
நேரம்: 8.00 மணி
தமிழ்: இரா.விஜய்
விஞ்ஞானம்:- T.டார்வின், S.சிவதாசன்
கணிதம்:- N.சதீஸ்
சமூகக்கல்வி:- M.பார்த்தீபன்
வணிகக்கல்வி:- B.பசில், T.சுரேன்

ஆர்வமுடைய அனைவரும் இதில் பங்குகொள்ளலாம்.
பாடக்குறிப்புக்களை அச்சிடுவதற்கு வசதியாக 30.11.2006இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

## கண்ணீர் அஞ்சலி

26.11.2006 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது கலாசாலையின் உடற்கல்வித் துறை 2ஆம் வருட ஆசிரிய மாணவன் சசிகரன் அவர்களின் அன்புத் தந்தை

**ஆறுமுகம் பாலேந்திரன்**

(தொழில்நுட்பவியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்) அவர்களின் மறைவினால் துயருற்றிக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாணவர் மன்றம்,
பலாலி ஆசிரிய கலாசாலை,
திருநெல்வேலி.

## கண்ணீர் அஞ்சலிகள்



எமது சங்கத்தின் நலனில் அக்கறை கொண்ட தெல்லிப்பழை, பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்

**கந்தையா ஸ்ரீபதி**

அவர்களது மறைவால் துயருறும் அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனை வேண்டுகின்றோம்.

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்,
அளவெட்டி வடக்கு.

## நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி
### 2007ஆம் ஆண்டுக்கான சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கான கேள்விப்பத்திரம் வழங்கும் கால எல்லை நீடிப்பு

18.11.2006 ஆம் திகதிய உதயன், தினக்குரல் பத்திரிகைகளில் செய்யப்பட்ட கேள்வி அறிவித்தலின் பிரகாரம் கேள்விப்படிவம் வழங்கும் கால எல்லை கீழ்க் குறிப்பிட்டவாறு நீடிக்கப்பட்டுள்ளது.

கேள்விப்படிவம் வழங்கப்படும் திகதி : 06.12.2006 புதன்கிழமை நண்பகல் 12மணிவரை.

கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 07.12.2006 வியாழக்கிழமை மு.ப. 10மணிவரை.

கேள்விப்படிவம் திறக்கப்படும் திகதி : 07.12.2006 வியாழக்கிழமை நண்பகல்12மணி.

குத்தகை தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
27.11.2006 (சி.50491)

பொன்னையா வைரமுத்து,
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

## கேள்வி அறிவித்தல்
### யாழ். போதனா வைத்தியசாலைக்கான தளபாட விநியோகம்

யாழ். போதனா வைத்தியசாலை கேள்வி சபைத் தலைவரால் இவ்வைத்தியசாலைக்கு தளபாடங்கள் விநியோகிப்பதற்கான சீலிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தளபாட விவரம் | அளவு | தேவையான அளவு |
|---|---|---|
| 1) 'L' Shape staff Officers Table | 33"x60"x72" (MLT) | 04 |
| 2) Office Table | 60"x30"x30" With 4 drawers and 1 locker | 38 |
| 3) Oval Table | 72"x32"x30" With 4 drawers and 1 locker | 02 |
| 4) Office Cupboard - Steel | 36"x18"x72" | 02 |
| 5) Cabinet (file) - Steel | 4 drawers | 02 |
| 6) Computer Table | 44''x22''x30'' 1 drawer | 05 |
| 7) Revolving Chair | High Back | 01 |
| 8) Revoling Chair | Medium Back | 38 |

**Items 1, 2 and 3 are to be made in very strong MBF Board with Rexin sticker coating. Mention about the gauge of the metal for item 4 & 5, Size of Revolving chair and free Transport for supply.**

02. ரூபா 500 ஐ மீளளிக்கப்படாத கேள்வி வைப்பாக வைத்தியசாலை கணக்காளர் அலுவலகத்தில் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்று சீலிடப்பட்டு இடது பக்க மேல் மூலையில் ''தளபாடங்கள் விநியோகம்'' என குறிப்பிட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 06.12.2006 முற்பகல் 10 மணிக்கு முன்னர் கேள்விப் பெட்டியில் இடப்படல்வேண்டும். அன்றையதினம் மு.ப. 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.

03. தளபாடங்கள் 18.12.2006 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ வழங்கத் தயாராக இருத்தல் வேண்டும்.

வைத்திய கலாநிதி ஏ.ஏ.ஞானஜோதி
பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
(சி.50494)

## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 ★ 01 ★ 1931



மறைவு 19 ★ 11 ★ 2004

**அமரர் வைத்திலிங்கம் இராசையா J.P**
(ஓய்வுபெற்ற வலி.வடக்கு உதவி அரசாங்க அதிபர்)
திதி : 28.11.2006

எங்கள் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் மெழுகுவர்த்தியாக இருந்து தன்னையே உருக்கி ஒளியூட்டிய எங்களின் அன்புத் தெய்வத்தின் இரண்டாவது ஆண்டு நினைவுகளை எங்களின் இதயங்களில் சுமக்கின்றோம்.

தகவல்:
இ.இரவீந்திரன் (மருமகன்),
25/23A, 1ஆவது ஒழுங்கை,
குட்செட் வீதி, தோணிக்கல்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(55720)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

# சர்வதேச சமூகத்தின் மீதும் வீழ்கிறது குற்றப் பொறுப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மாவீரர் தின உரை, தமிழர் தாயகத்தில் மட்டுமல்ல, இலங்கைத் தீவிலும், சர்வதேச மட்டத்திலும் பலத்த அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியிருந்தாலும் தமிழர் தரப்பில் இந்த அறிவிப்பு முன்னரே எதிர்பார்க்கப்பட்ட ஒன்று தான்.

*"சிங்களப் பேரினவாதத்தின் கடுமையான போக்கு, தனியரசு என்ற ஒரேயொரு பாதையைத்தான் இன்று தமிழீழ மக்களுக்குத் திறந்து வைத்திருக்கின்றது. எனவே, இந்த விடுதலைப் பாதையிற் சென்று, சுதந்திரத் தமிழீழத் தனியரசை நிறுவுவதென இன்றைய நாளில் தீர்க்கமான முடிவு செய்திருக்கின்றோம்."* - என்று 'வெட்டு ஒன்று துண்டு இரண்டாக' தலைவர் பிரபாகரன் போட்டுடைத்து அறிவிப்பார் என - பிரகடனப்படுத்துவார் என - பலரும் எதிர்பார்த்திருக்கவில்லை என்பது வாஸ்தவம்தான்.

ஆனால், இலங்கையில் இனப்பிரச்சினைக்கான அமைதி முயற்சிகள் இப்படித்தான் கையாளப்படும் என்பதை சமாதான முயற்சிகள் ஆரம்பமாகு முன்னரே 2002 ஜனவரியில் பலரும் எதிர்வு கூறியிருந்தனர்.

அமைதி முயற்சிகள் இப்படியான ஒரு திசையை நோக்கித்தான் நகர்த்தப்பட்டன என்பது இப்போது கண்கூடாகத் தெரியும் விடயம். இதையே பிரபாகரனும் தமது உரையில் தெளிவாகவும், விளக்கமாகவும் சுட்டிக்காட்டுகின்றார்.

அமைதி முயற்சிக் காலத்தைத் தென்னிலங்கை அரசு கையாண்ட விதத்தில் விசனத்தின் உச்சிக்கே தமிழர்கள் சென்றிருக்கின்றார்கள் என்பதைப் பிரபாகரன் தமது உரை ஊடாகப் பிரதி பலிக்கின்றார்.

இன உரிமை மற்றும் சுதந்திரம் என்ற உயரிய விழுமியங்களுக்காக சுமார் மூன்று தசாப்த காலம் அஹிம்சை மார்க்கத்திலும், சுமார் இரண்டு தசாப்த காலம் முழு ஆயுத வழியிலும் போராடி வரும் தமிழினத்துக்கு இந்தப் போராட்ட காலப் பேரிழப்புகள், பாதிப்புகள், அவலங்கள், அல்லல்கள், துன்பங்கள் எல்லாம் சகஜமாகிவிட்டன.

போர்க்காலக் கொடூரங்களை எதிர்கொண்ட தமிழினத்துக்குக் கடந்த ஆறு ஆண்டு கால சமாதான வேளைதான் மிக மோசமானது என்ற முடிவுக்குத் தமிழினம் தள்ளப்பட்டிருக்கின்றது. அந்த வகையில்தான் இந்தச் சமாதான வேளைக் காலத்தில் தமிழினம் கையாளப்பட்டிருக்கின்றது என்பதை உரைக்கின்றார் பிரபாகரன்.

சமாதான வேளையில் தமிழர்களுக்கு எதிராக அரங்கேறிய அவலங்களை வரிசைப்படுத்தி, உலகின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்பும் விதத்தில் கேள்விக் கணைகளை தொடுக்கிறார் பிரபாகரன்.

*"போருக்கு ஓய்வு கொடுத்து, சமாதான வழியிற் சமரசப் பேச்சுக்கள் வாயிலாக எமது மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நாம் நேர்மையுடனும், நெஞ்சுறுதியுடனும் முயற்சித்து ஆறு ஆண்டுகள் அசைந்தோடி விட்டன. நாம் அமைதி காத்த இந்த ஆறு ஆண்டு காலத்தில் - இந்த நீண்ட கால விரிப்பில் - தணியாத நெருப்பாக எரிந்து கொண்டிருக்கும் தமிழரின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டதா? தமிழரைச் சதா கொடுமைப்படுத் திக் கொன்றொழித்து வரும் சிங்கள ஆட்சியாளர்களின் மனவுலகில் மாற்றம் நிகழ்ந்ததா? தமிழரின் நீதியான, நியாயமான கோரிக் கைகள் எவையும் நிறைவேற்றப்பட்டனவா? ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அடாவடித்தனங்களால் நாள்தோறும் அவலத்திற்கும், இம்சைக்கும் ஆளாகி நிற்கும் எம்மக்களுக்கு நிம்மதி கிடைத்ததா? எம் மக்களை நாளாந்தம் அழுத்தி வரும் அன்றாட, அவசியப் பிரச்சினைகள்தானும் தீர்த்து வைக்கப்பட்டனவா? எதுவுமே நடக்கவில்லை. மாறாக, எத்தனையோ கனவுகளோடு, எத்தனையோ கற்பனைகளோடு நீதி கிடைக்குமெனக் காத்திருந்த தமிழருக்குச் சாவும், அழிவுமே பரிசாகக் கிடைத்திருக்கின்றன. சோதனை மேல் சோதனையாக, வேதனை மேல் வேதனையாகத் தாங்க முடியாத துயரச் சுமை தமிழர் மீது சுமத்தப்பட்டிருக்கிறது. இந்த வேதனையால் அழுதழுது கண்ணீர் தீர்ந்து, இரத்தமே கண்ணீராக வருகின்ற சோகம் தமிழினத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. மொத்தத்தில் இந்த அமைதிக் காலம் தமிழர் வரலாற்றில் என்றுமே நிகழ்ந்திராத இரத்தம் தோய்ந்த இருண்ட காலமாக மாறியிருக்கிறது.*

*"அமைதி போதித்த உலக நாடுகள் மௌனத்திற்குள் தமது மனச்சாட்சியைப் புதைத்து விட்டு, கண்களை மூடிக் கொண்டு அமைதியாக இருக்க, தமிழர் மண்ணில் பெரும் மனித அவலம் இன்று அரங்கேறி வருகிறது."*

- இப்படி வரிசைப்படுத்திக் கேள்வி எழுப்பியிருக்கிறார் விடுதலைப் புலிகளின் தலைவர்.

இந்நிலைமைகளுக்குத் தென்னிலங்கைச் சிங்களத்தின் மகாவம்சச் சிந்தனையில் தோய்ந்த பேரினவாத மேலாண்மைப் போக்கும், அதனடிப்படையில் எழுந்த திமிரும், அடக்குமுறைச் செருக்கும் ஒரு புறம் காரணம் என்றால், மறுபுறம் இந்நிலைமைக்கு இடமளித்து, தமது மனச்சாட்சிக் கதவை மூடி வைத்துவிட்டு, ஒரு பக்கச் சார்பாக நடந்து கொண்ட சர்வதேசமும் பாரிய தவறு விட்டிருப்பதை ஈழத் தமிழர்களின் பிரதிநிதியாக நின்று பிரபாகரன் சுட்டுகின்றார்.

ஆகவே, மீண்டும் முழு அளவில் யுத்தப் பாதையை நோக்கி இலங்கை திரும்பியிருக்கின்றது என்றால் அதற்கான பொறுப்பை சர்வதேச சமூகமும் ஏற்றாகத்தான் வேண்டும்.

அமைதி முயற்சிகளில் ஈடுபட்ட இரு தரப்புகளையும் பக்கச் சார்பாக நடத்தி, அதன் மூலம் அவற்றுக்கிடையில் இருந்த சமநிலையையும், சமபங்காளிகள் என்ற தகைமையையும் மோசமாகப் பாதிக்கச் செய்த சர்வதேச சமூகம் இந்தக் குற்றப் பொறுப்பிலிருந்து தன்னை விலக்கிக் கொள்ளவே முடியாது.

சுதந்திர விடுதலைப் போராட்டத்தை மீள ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்திருக்கும் விடுதலைப் புலிகளை அதற்காகத் திட்டித் தீர்த்துக் கரித்துக் கொட்ட சர்வதேச சமூகத்தின் ஒரு பகுதி முயலலாம். அதற்கு முன்னர் தான் இவ்விவகாரத்தில் இழைத்த பெருந்தவறை ஒரு தடவை அது சீர்தூக்கிப் பார்ப்பது நல்லது.

# ஏ-9 பாதை பற்றிய மஹிந்தவின் புதிய அறிவிப்பு பொருள்களின் விலையை மேலும் அதிகரித்துள்ளது

நல்லூர்,நவ.29

புலிகள் வன்முறையைக் கைவிடும் வரை ஏ-9 பாதையை திறக்கப் போவதில்லை என இந்தியாவில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்ததைத் தொடர்ந்து, யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள், மருந்தகங்கள் மற்றும் நடைபாதை கடைகளில் பொருள்களின் விலைகள் இதுவரை இருந்ததை விட பல மடங்காக அதிகரித்துள்ளது.

நடைபாதைக் கடைகளில் முன்னர் ரூபா 120 இற்கு விற்பனை செய்யப்பட்ட நுளம்புத்திரி நேற்றுமுன்தினம் 200 ரூபா முதல் 250 ரூபா வரையும், டைமன் பால்மா 600 ரூபாவாகவும், அங்கர் 320 ரூபாவாகவும், விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

இதேசமயம் சிறிய ரக பற்றறிகள் 10 ரூபாவாலும் பெரிய பற்றறிகள் 20 ரூபாவாலும் அதிகரித்திருந்தது. முன்னர் சிறிய பற்றறிகள் 60 ரூபாவிற்கும் பெரியது 120 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்பட்டுவந்தன.

மருந்தகங்களில் நீரிழிவு, இருதய நோய் போன்றவற்றுக்கான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. 30 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட 'எக்கோஸ்பிறின்' காட் ஒன்று தற்போது 80 ரூபாவாகவும், 'மெற்போமின்' முன்னர் வில்லை ஒன்று 40 சதமாக விற்கப்பட்டது. இப்போது ஒரு ரூபா 50 சதம் முதல் 2 ரூபா வரை விற்பனையாகிறது.

சில மருந்தகங்களில் பற்றுச் சீட்டு வழங்கப்படவில்லை. இனிமேல் மருந்துகள் வருவதற்கான சாத்தியம் இல்லை எனவும் மருந்தகங்களில் விற்பனையாளர்கள் தெரிவித்ததாகக் கூறப்பட்டது.

(203-111)

# வடமராட்சியில் மாவீரர் அஞ்சலி

யாழ்ப்பாணம்,நவ.29

வடமராட்சியில் மாவீரர் தினமான திங்களன்று தீபங்கள் ஏற்றியும் ஆலயங்களில் அர்ச்சனைகள் செய்தும் பொதுமக்களும், போராளிகளும் அஞ்சலி செய்தனர்.

மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் ஆலயங்களுக்குச் சென்று அங்கு சிட்டிகளில் தீபம் ஏற்றி கண்ணீர் மல்கி அஞ்சலி செலுத்தியதோடு அர்ச்சனைகளும் செய்து வழிபட்டனர்.

தீருவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் உறவினர்கள் பலர் சிட்டிகளில் தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் எவரும் அஞ்சலி செலுத்தவில்லை.

இதேவேளை, திங்கள் இரவு ஆறு மணியளவில் போராளிகள் வேட்டுக்களைத் தீர்த்து மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். வேட்டுச் சத்தங்கள் வடமராட்சியின் பல இடங்களுக்கும் கேட்டன.

(1-155)

# திருமலையிலிருந்து ஓரிரு தினங்களில் 3ஆயிரம் தபால் பொதிகள் கப்பல் மூலம்

யாழ்ப்பாணம்,நவ.29

குடாநாட்டுக்கான 3 ஆயிரத்து 225 தபால் பொதிகள் 'யால' கப்பல் மூலம் எடுத்துவரப்படுவதாக யாழ்.மாவட்ட பிரதித் தபால் மா அதிபர் எம்.குமரகுரு தெரிவித்தார்.

திருகோணமலையில் இருந்து இன்று காங்கேசன்துறை நோக்கிப் புறப்படும் இக் கப்பலில் இத் தபால் பொதிகள் எடுத்து வரப்படுகின்றன. -

ஓரிரு தினங்களில் கப்பல் வந்து சேர்ந்ததும் தபால்கள் தரம்பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வவுனியாவில் தேங்கியிருக்கும் 525 தபால் பொதிகள் இன்று திருமலைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. திருமலையிலுள்ள 788 தபால் பொதிகளுடன் இந்தப் பொதிகளும் அடுத்த வாரம் கப்பல் மூலம் எடுத்துவரப்படவிருக்கின்றன.

வாரம் தோறும் தபால் பொதிகளை குடாநாட்டுக்கு அனுப்ப தபால் மா அதிபர் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் பிரதித் தபால் மா அதிபர் மேலும் தகவல் வெளியிட்டார்.

(1)

# சகல வர்த்தக நிலையங்களிலும் திடீர் சோதனைகளுக்கு ஏற்பாடு

## அரச அதிபர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,நவ.29

குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்கள் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுவதைக் கண்டுபிடிக்க, வர்த்தக நிலையங்களில் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படஉள்ளன.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வர்த்தக நிறுவனங்களில், விலைப் பட்டியலை வெளிக்காட்டி வைக்காதிருத்தல், பற்றுச்சீட்டு வழங்க மறுத்தல், பொருள்களை விற்பனை செய்ய மறுத்தல், நிபந்தனைக்கமைய விற்பனை செய்தல், பொருள்களைப் பதுக்கி வைத்தல், ஏமாற்றி விற்பனை செய்தல், நியாயமற்ற அதிக விலையில் விற்பனை செய்தல் ஆகியவை தண்டனைக்குரிய குற்றமாகும்.

இவை பற்றி ஏற்கனவே பத்திரிகைகள் மூலமும் அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. எனினும் இவற்றை மீறிய செயற்பாடுகள் குறித்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதால் வழமையை விட மேலதிகமான ஏற்பாடுகளைச்செய்து திடீர் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை மாவட்ட பிரதேச செயலக அதிகாரிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த 26 ஆம் திகதி யாழ்.செயலக அதிகாரிகளினால் யாழ்ப்பாணம், திருநெல்வேலி பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களில் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட போது சில வர்த்தக நிலையங்களில் அரிசி, சவர்க்காரம், போன்ற பொருள்கள் விலைப்பட்டியல் இல்லாமலும் கூடிய விலையிலும் விற்பனை செய்யப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விரைவில் அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. இத்தகைய திடீர்ப் பரிசோதனைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவுள்ளன.

அறிவித்தலில் ஏற்கனவே குறிப்பிட்ட சட்ட மீறல்களை மேற்கொள்ள வேண்டாம் என மீண்டும் வர்த்தகர்கள் வலியுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது.

(1)

## நாளை

கார்த்திகை 14
வியாழக்கிழமை
30.11.2006
திதி : தசமி
பிற்பகல் : 04.29
நட்சத்திரம் : உத்தரட்டாதி
முன்னிரவு : 09.08
சுபநேரம் : 07.44 - 09.14
ரா[illegible] - 03.14

# நேற்றும் ஒருவர் சரணடைந்தார்

யாழ்ப்பாணம்,நவ.29

இனந்தெரியாத ஆயுததாரிகளின் அச்சுறுத்தல் காரணமாக வலிகாமம் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று தஞ்சமடைந்துள்ளதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழுவினர் தெரிவித்தனர்.

பிரஸ்தாப இளைஞரின் வீட்டுக்குச் சென்ற ஆயுத தாரிகள் அவரை மிரட்டியதாகவும் அவர் சமயோசிதமாக நடந்துகொண்டு தொலைபேசி வாயிலாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவைத் தொடர்புகொண்டதாகவும் - தெரியவருகிறது.

மனித உரிமை ஆணைக்குழுவினர் அப்பகுதிக்கு விரைந்து அவரை மீட்டு தமது வாகனத்தில் அலுவலகத்துக்கு கொண்டுசென்று விசாரணை நடத்தினர். அவர் தற்போது சிறைச்சாலையில் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

(1-79)

# கோண்டாவில் இளைஞரை காணவில்லையாம்

யாழ்ப்பாணம்,நவ.29

கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரைக் காணவில்லை என்று அவரது உறவினர்களால் யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோண்டாவில் வடக்கு கலைவாணி வீதியைச் சேர்ந்த மாணிக்கம் செல்வராஜா (வயது 24) என்ற இளைஞரைக் காணவில்லை என அவரது தாயாரால் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

(1-79)

# கந்தர்மடத்தில் குடும்பப்பெண் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,நவ.29

கந்தர்மடம், ஆத்திசூடி வீதியில் நேற்று நண்பகல் குடும்பப் பெண் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த உதயகுமார் றெஜினா (வயது 34) என்ற ஐந்து பிள்ளைகளின் தாயே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

அவரது வீட்டுக்கு வந்த இனந்தெரியாதோர் அவரை வெளியே அழைத்து சுட்டுக்கொன்றனர் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

சடலத்தை பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் கையளிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(1-68)

# கல்விசார் பிரிவினருக்கு படையினரின் கோரிக்கை

வன்செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு புகலிடம் வழங்குவதில் இருந்தும், தொலைபேசி சேவையை வழங்குவதில் இருந்தும் கல்வி சார் பிரிவினர் தங்களை விடுவித்துக்கொள்ள வேண்டும் என்று பாதுகாப்புப் படையினர் கேட்டுள்ளனர்.

51ஆவது படையணி நேற்று விடுத்த பத்திரிகைக் குறிப்பில் இந்த அறிவுறுத்தல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

இராணுவத்தினருக்கு எதிராக நடைபெற்ற வன்செயல்களில் தொடர்புடைய விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் கடந்த காலங்களில் கல்வித் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகங்கள், [illegible]களில் கல்விசார் நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ள தொலைபேசிகளை தமது நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தி வந்துள்ளனர்.

தங்களுக்கு இடையிலான தொடர்புகளை பேணுவதற்கு இந்த அலுவலகங்களிலுள்ள தொலைபேசிகளை பயன்படுத்துவதுடன் இந்த இடங்களை தமது மறைவிடங்களாகவும் பாவித்து விடுதலைப் புலிகள் தப்பித்துக்கொள்கின்றனர். இவ்விடயம் பாதுகாப்புப் படையினரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் உள்ள மாணவ மாணவிகளினதும் பொதுமக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பாதுகாப்பு படையினருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். - என்று உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தப் பிரகடனம் செய்துள்ள பிரபாகரன் இனிப் பேச்சுக்கு அழைத்தால் வருவாரா?

## நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்புகிறார் அநுரா

கொழும்பு, நவ. 29

''மாவீரர் தின உரையில் பிரபாகரன் வாய் மூலமாக யுத்த பிரகடனம் செய்துள்ளார். ஸ்ரீ.ல.சு.கட்சியும் ஐ.தே.கட்சியும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ள நிலையில் புலிகளைப் பேச்சுக்கு வரும்படி அழைத்தால், அவர்கள் பேச்சுக்கு வருவார்களா என்பது இனிச் சந்தேகமே'' - என சுற்றுலாத்துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு விவாதத்துக்குப் பதிலளித்து அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

''பிரபாகரனின் மாவீரர் தின உரைக்கு அரச ஊடகங்கள் உட்பட ஏனைய ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுக்கவே இல்லை.

பிரபாகரனின் மாவீரர் தின உரை உலகளாவிய பேச்சு. இதற்கு பி.பி.ஸி., சீ.என்.என். போன்ற உலகப் பிரசித்திபெற்ற ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்துள்ளன. அதிஷ்டவசமாக நான் இந்த உரையை 'சிரச' தொலைக்காட்சியில் பார்த்தேன்.

பிரபாகரனை ஜே.ஆர். ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாஸ உட்பட பிரபல அரசியல்வாதிகள் நேரில் பார்த்ததில்லை. ஆனால் பிரபாகரனின் இலக்குக்கு ஆர். பிரேமதாஸ, லலித் அத்துலத் முதலி உட்பட பலர் பலியாகியுள்ளனர்.

இந்த நிலையில் வார இறுதிப் பத்திரிகையொன்று பிரபாகரனின் உடல்நிலை குறித்தும் அவருக்குள்ள நோய்கள் குறித்தும் விலாவாரியாகச் செய்தி வெளியிட்டிருந்தது. இது முட்டாள்தனமானதாகும்.

இந்நாட்டில் பயங்கரவாதம் இருந்த போதும் ஒரு சுற்றுலா பயணியாவது பயங்கரவாதத்துக்கு இலக்காகவில்லை. இது எமக்குச் சாதகமானது. இருந்தும் காலி கடற்படை முகாம் தாக்கப்பட்டபோது பி.பி.ஸி., இலங்கையின் சுற்றுலாத்துறை நகரான காலி பயங்கரவாதிகளின் தாக்குதலுக்குள்ளானதாகச் செய்தி பரப்பியது. இதன் காரணமாக எமக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

பிரான்ஸ், அவுஸ்திரேலியா உட்பட பல நாடுகள் மேற்கண்ட செய்தியைக் கேட்டு இலங்கைக்கு சுற்றுலா செய்வதைத் தவிர்த்துக் கொள்ளும்படி தமது பிரஜைகளிடம் கேட்டுக் கொண்டன. இருந்தும் எமது வேண்டுகோளுக்கிணங்க பிரான்ஸ், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் இந்தத் தடையை நீக்கியுள்ளன.

கல்பிட்டிய, துங்துவ ஆகிய இடங்களைச் சுற்றுலாத்துறை மையங்களாக மாற்றியமைக்க எனது அமைச்சு 2007 ஆம் ஆண்டு நடவடிக்கை மேற்கொள்ளும். இச்சுற்றுலா மையங்கள் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் வகையில் அபிவிருத்தி செய்யப்படும்.

நுவரெலியா, நீர்கொழும்பு ஆகிய சுற்றுலாத் தளங்கள் ஜப்பான் அரசின் நிதி உதவியுடன் அபிவிருத்தி செய்யப்படும்.

மாவீரர் தினத்தன்று பிரபாகரன் ஆற்றிய உரையின்படி எதிர்வரும் காலங்கள் இலங்கைக்கு மிகக் கஷ்டமானவையாக இருக்கும். ஏனவே வரவு செலவுத் திட்டத்தின்படி 2010 ஆம் ஆண்டில் இங்குவரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை எதிர்பார்த்தபடி இருக்காது என நினைக்கிறேன்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ், ஈராக் விவகாரம் காரணமாகவே இன்று அமெரிக்காவில் செல்வாக்கு இழந்துள்ளார். இதற்கு கலிபோர்னிய சூழல் விவகாரம் காரணமல்ல.

சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் ஆகியவை இந்த நாட்டில் சமாதானம் இருந்தால் மட்டுமே அபிவிருத்தியடையும். பிரபாகரன் மாவீரர் தின உரையில் யுத்த பிரகடனம் செய்துள்ளார் என்றே நான் கருதுகின்றேன். எனவே நாம் இது குறித்துக் கவனம் செலுத்த வேண்டும்'' - என்றார் அமைச்சர் அநுரா.

---

## குடாநாட்டில் சகல மாணவர்களுக்கும் சோயா கலவை மா விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.29

உலக உணவுத் திட்டத்தின் கல்விக்கான உணவுச் செயற்பாட்டின் கீழ் ஒவ்வொரு மாணவனுக்கும் சோயா மா கலவைப் பக்கெற் வழங்கப்பட இருக்கின்றது.

தரம் 1 முதல் தரம் 9 வரை பயிலும் மாணவர்களுக்கு இந்த சோயா மா பக்கெற் வழங்கப்படும்.

பாடசாலைகளின் 3ஆம் தவணை முடிவுறவுள்ளதால் அதற்குமுன்பாக விநியோகத்தை மேற்கொள்ளவேண்டும் என்றும் -

யாழ். செயலகத்தில் இயங்கும் மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலாளர் அலுவலகத்தில் வழங்கற்கட்டளைகளை இன்று பெற்றுக்கொண்டு உடன் களஞ்சியங்களில் இருந்து அவற்றைப் பெற்று விநியோகத்தை மேற்கொள்ளும்படியும் - அரச அதிபர் கே. கணேஷ் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விநியோகம் சீரான முறையில் மேற்கொள்ள பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்துமாறு அரச அதிபர் கல்விப் பணிப்பாளர்களைக் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு 33 ஆயிரத்து 985 பக்கெற்றுகளும், தீவகத்துக்கு 8 ஆயிரத்து 39 பக்கெற்றுகளும், வலிகாமத்துக்கு 30 ஆயிரத்து 580 பக்கெற்றுகளும் வடமராட்சிக்கு 16 ஆயிரத்து 04 பக்கெற்றுகளும் தென்மராட்சிக்கு 11 ஆயிரத்து 193 பக்கெற்றுகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. (1)

## தீவக அதிபர்களுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ.29

தீவகக் கோட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேலணை ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

உரிய ஆவணங்களுடன் அதிபர்களை அதில் கலந்து கொள்ளுமாறு தீவகம் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் கேட்டுள்ளார். (1-203)

---

## முடிய அறையில் ரவிராஜ் படுகொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணைகள் ஆரம்பமாகின.

கொல்லப்பட்ட ரவிராஜின் சடலத்தைக் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் முதலில் அடையாளம் காட்டிய ரவிராஜின் சிறிய தகப்பனாரும், சட்டத்தரணியுமான வேலுப்பிள்ளை கணேசலிங்கம் உட்பட இருவர் நேற்றைய மரண விசாரணைகளில் சாட்சியமளித்தனர் எனத் தெரிகின்றது.

ரவிராஜின் உறவினர்களின் நலனைக் கவனிப்பதற்காக ஆஜராகியிருந்த சட்டத்தரணி கே.வி. தவராஜா, நேற்று கணேசலிங்கத்தின் சாட்சியங்களை நெறிப்படுத்தினார். இப்படுகொலை தொடர்பான விசாரணைகளைத் துரிதமாக நடத்தி, சந்தேக நபர்களைக் கைது செய்து நீதிமன்றில் நிறுத்துமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாருக்கும், பொரளைப் பொலிஸாருக்கும் நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

ரவிராஜ் படுகொலை செய்யப்பட்ட இடத்தில் காணப்பட்டதாகத் தெரிவித்து தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வான் ஒன்றை விடுவிக்கும்படி உத்தரவிடுமாறு கோரி, சம்பந்தப்பட்ட வானின் உரிமையாளரின் சார்பில் சட்டத்தரணி ஒருவர் ஆஜராகி நீதிமன்றத்திடம் விண்ணப்பித்தார் எனத் தெரிய வந்தது.

ஆனால், அந்த வானை விடுவிப்பதைக் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் ஆட்சேபித்தனர்.

மேற்படிப் படுகொலை தொடர்பாக 'ஸ்கொட்லண்ட் யார்ட்' பொலிஸாரை வரவழைத்துத் துப்புத்துலக்க ஜனாதிபதி முடிவு செய்திருக்கின்றார் என நீதிமன்றுக்குத் தெரிவித்த பொலிஸார், அவர்கள் வந்து விசாரணை நடத்துவதற்கு முன்னர், கொலை தொடர்பான எந்தத் தடயப் பொருளையும் - மேற்படி வான் உட்பட எதனையும் - விடுவிக்க முடியாது என நீதிமன்றில் தெரிவித்தனர்.

அந்த வாதத்தை ஏற்ற நீதிவான், வானைத் தொடர்ந்தும் தடுத்து வைத்திருக்க உத்தரவு பிறப்பித்தார். (உ)

---

## நோர்வேயின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உருவாகியுள்ள தற்போதைய கள நிலைமை குறித்து ஆராயவே நோர்வேயின் விசேட தூதர் ஹன்சன் போவர் அவசரமாக இங்கு வருகிறார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் இருந்து விலகுவதற்கான அறிவிப்பாக பிரபாகரனின் உரையை நோர்வே கருதுவதாகவும் -

நிலைமையை நேரில் அறிய அவர் நாளை அவசர விஜயம் மேற்கொள்கின்றார் என்றும் - தகவல்கள் தெரிவித்தன. (அ-1)

---

## மன்மோகன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சோனியா காந்தி, எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே. அத்வானி ஆகியோரையும் மஹிந்த ராஜபக்ஷ சந்தித்துப் பேசினார். இன்று பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசவிருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த. (த-12)

---

## பிரபாவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொலைக்காட்சிகளுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரை தொடர்பாகத் தமது செவ்வியில் கருத்துத் தெரிவித்தபோதே ஜனாதிபதி மஹிந்த இதனைக் கூறினார்.

''பிரபாகரனின் உரையை நான் பெரிதாக எடுத்துக்கொள்ளவே மாட்டேன். இப்படிப் பேசுவது அவருக்கு வாடிக்கையானது தான். என்றுமே பேச்சுமூலம்தான் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று நான் நம்புகிறேன். அதற்காக பிரபாகரனுடன் நேரடியாகப் பேசவும் நான் தயாராகத்தான் இருக்கிறேன்'' என்றார் மஹிந்த ராஜபக்ஷ.

''விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஒட்டுமொத்தப் பிரதிநிதிகள் அல்லர். அதுபோல தமிழர்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் அல்லர். இதனைச் சர்வதேச சமூகம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்'' என்றும் ஜனாதிபதி தமது செவ்வியில் குறிப்பிட்டார்.

''ஒற்றையாட்சியின்கீழ் தமிழர்களுக்கு அதிகபட்ச அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதே எமது நோக்கம்'' என்றும் அவர் சொன்னார். (த-12)

---

## மாணவர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்களையும், தனியார் கல்வி நிலைய மாணவர்களையும் இணைத்துக்கொண்டு விடுதலைப் புலிகள் செயற்படுவதாகவும் படையினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன -

எனவே, இவ்வாறான வன் செயல்களில் மாணவர்கள் ஈடுபடுவது, ஒத்துழைப்பு வழங்குவது நிரூபிக்கப்பட்டால் இதர அப்பாவி மாணவர்களும் பாதிக்கப்படுவதுடன், கல்வி செயற்பாடுகளும் பாதிப்புக்குள்ளாகும். -

உங்களது பிள்ளைகளின், மாணவர்களின் சுபிட்சமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுப்பது உங்களின் தலையாய கடமையாகும் - என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## யுத்தநிறு[illegible]த....

(முத[illegible]ாம் பக்கத் தொடர்ச்சி)

கிடக்கிறது. புலிகளின் இலக்குகளுக்கு எதிராக மும்முனைகளிலும் தாக்குதல் தொடரும் என அறிவித்து, மஹிந்தவின் அரசு ஒப்பந்தத்திற்கு ஈமக்கிரியைகளையும் நடத்தி முடித்திருக்கின்றது.'' - என்று அறிவித்துள்ள தலைவர் பிரபாகரன், அதற்கு அப்பாலும் போய் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

''சிங்களப் பேரினவாதத்தின் கடுமையான போக்கு, தனியரசு என்ற ஒரேயொரு பாதையைத்தான் இன்று தமிழீழ மக்களுக்குத் திறந்து வைத்திருக்கின்றது. எனவே, இந்த விடுதலைப் பாதையில் சென்று, சுதந்திரத் தமிழீழத் தனியரசை நிறுவுவதென இன்றைய நாளில் நாம் தீர்க்கமாக முடிவு செய்திருக்கிறோம்.'' - என்றும் அவர் பிரகடனப்படுத்தியிருக்கிறார்.

இலங்கை அரசின் செயற்பாடுகளினால் போர்நிறுத்த உடன்பாடு செத்துவிட்டதாக ஒருபுறம் அறிவிப்பு.

மறுபுறத்தில், சுதந்திரத் தமிழீழத் தனியரசை நிறுவுவதென முடிவுசெய்யப்பட்டுள்ளது என்ற பிரகடனம்.

இவற்றைக் கூட்டிக் கழித்துப் பார்த்துள்ள தென்னிலங்கை, இதன் அர்த்தம், 'யுத்த நிறுத்தம் முடிவடைந்து விட்டது; முறிவடைந்து விட்டது, இனித் தமிழீழத்துக்கான முழு அளவிலான யுத்தமே என்று புலிகள் தீர்மானித்து விட்டனர்' - எனக் கொள்ளலாமா என அங்கலாய்ப்பதாகத் தெரிகின்றது.

### முடிவு என்ன என்பதை அறிய அரசு பல தரப்பு மூலம் முயற்சி

இப்பிரசாரத்தில் புலிகளின் உறுதியான - இறுதியான - முடிவுதான் என்ன வென்பதை அறிந்துகொள்வதற்கு கொழும்பு அரசு பல தரப்பின் மூலமும் பகீரத முயற்சியை எடுத்து வருவதாகவும் தெரிகின்றது.

இவ்விடயம் குறித்து புலிகளுடன் தொடர்புகொண்டு பேசி, உண்மையை உறுதிப்படுத்தி, உண்மை நிலைமையைத் தெளிவாகத் தங்களுக்குத் தெரியப்படுத்தும்படி நோர்வே அனுசரணையாளர்களையும், போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவையும் இலங்கை அரசு அவசரமாகக் கோரியிருக்கின்றது.

இத்தகைய கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதை இலங்கைப் பாதுகாப்புத்துறைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல உறுதிப்படுத்தினார். (உ)

---

## போர்நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரியான அன்ரா ஜெகனஸ்பெர்கும் இடம்பெற்றிருந்தார்.

அரசியல்துறை அலுவலகத்தில் நேற்று முற்பகல் 11 மணிக்கு விடுதலைப் புலிகளின் பிரதிநிகளை இக் குழுவினர் சந்தித்தனர்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவில் காவல்துறை பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் சி. புலித்தேவன், இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் ஆகியோர் பேச்சுக்களில் கலந்துகொண்டனர்.

போர்நிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்து கடைப்பிடிக்க விடுதலைப் புலிகள் தயாராக இருக்கின்றனர். இந்த உடன்படிக்கையை உரியமுறையில் நடைமுறைப்படுத்த அரசாங்கமே தவறிவிட்டது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் ஏ-9 பாதையைத் திறக்க அரசு மறுத்து வருகின்றது.

அதனால் யுத்த நிறுத்த உடன்படிக்கை அடிப்படையிலேயே செயலிழந்துவிட்டது - என்று தமிழ்ச் செல்வன் சுட்டிக்காட்டினார்.

மாவீரர் தின உரையில் தலைவர் பிரபாகரன் இதனையே கூறினார் என்பதும் கண்காணிப்புக் குழுவினரிடம் எடுத்துக் கூறப்பட்டது. (அ-1)

---

## ஒன்றுபட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் - இந்தியா தெரிவித்துள்ளது. இது தொடர்பாக இந்தியாவின் கவலையையும் வெளியுறவு அமைச்சர் வெளியிட்டார்.

---


**தரம் 09 வடக்கு கிழக்கு மாகாணமட்ட பொதுப் பரீட்சை**

01.12.2006 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ள மாகாண மட்ட பரீட்சைக்கான சகல பாடங்களின் வினாத்தாள்களும், விடைகளும் மற்றும் முற்றிலும் எதிர்பார்க்கை மாதிரி வினா - விடைகள்.

**நூலகசிங்கம் புத்தகசாலை**
யாழ்ப்பாணம்.

**G.C.E. O/L மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை - MODEL EXAM**

ஆரம்பம்: 01.12.2006 முதல் 05.12.2006 வரை
* நேர அட்டவணையை அலுவலகத்தில் பெறவும்.
* வெளி மாணவர்களும் தோற்றலாம்.

**நாவலர் இன்ஸ்ரிரியூட்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**பிற்போடப்பட்டுள்ளது**

யுனிவெக் நிறுவனத்தில் இவ் வாரம் ஆரம்பிக்கப்படவிருந்த VB.Net வகுப்புக்கள் தென்மராட்சி வடமராட்சி மாணவர்களின் வேண்டுதலின்படி பிற்போடப்பட்டுள்ளது.

Director, Univac SEP
594/6, K.K.S. Road,
Jaffna.

**காரைநகரில் உதயமாகின்றது**

**ஸ்கந்தா கல்வி நிறுவனம்**

தரம் 6 முதல் A/L வரையான வகுப்புகள்
மாணவர்களே: பதிவுகள் அலுவலகத்தில்
மிகவிரைவில்: ஆசிரியர் விபரம் - உதயனில்

புதுறோட், காரைநகர்.
இயக்குநர்: கோ. சிறீவரதன்.

**இலவசக்கணனிப்பயிற்சி**

ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும் பங்காற்றிய எமது நிறுவனம் விசேட கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை முன் வைத்துள்ளது.

MCS Supported By UNDP/JRRP

விபரங்களிற்கும், பதிவுகளிற்கும் 01-12-2006 முன் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
(பரமேஸ்வராசந்தி அருகே)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible]ல் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.11.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org